தரம் 5 – 11 வரை

எண்: 06 எழுத்து: 08
ஆகஸ்ட் 2012


# AHARAM அகரம்

பொதுசன நூலகம்
08 AUG 2012
மாநகரசபை யாழ்ப்பாணம்

# கட்டம் கட்டமாக முன்னேறுவோம்

## அகரம் இணையதளம் புதிய வாயில்களைத் திறக்கிறது

www.aharam.lk



Des: Sinan

மாதாந்த சஞ்சிகை

40/-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்
எண்: 06 ஆகஸ்ட், 2012 எழுத்து: 08




பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
ஏ.ஏ.முஹம்மத் பவாஸ் (இஸ்லாஹி)

சந்தா விபரம்
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: *editor@aharam.lk*
*www.facebook.com/aharamJmf*

# உள்ளே...




06



14



12


மாணவர்களும் நேர முகாமைத்துவமும்


கட்டம் கட்டமாக முன்னேறுவோம்
29



09



37

பாடத்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| வரலாறு | 17 | தமிழ் | 24 |
| விஞ்ஞானம் | 31 | புலமைப் பரிசில் | 38 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை வெற்றியின் முதற்படி

"தேசியக் களஞ்சியங்களின் நிர்வாகியாக என்னை ஆக்கி விடுங்கள். நிச்சயமாக நான் அதனை நன்கு பாதுகாக்கும் ஆற்றலும் அதனை நிர்வகிக்கும் அறிவாற்றலும் பெற்றவன்." (ஸூரா யூசுஃப்: 55)

ஸூரா யூசுஃப், நபி யூசுஃப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், வாழ்வில் எதிர் கொண்ட பல்வேறு சோதனைகளையும் துன்பங்களையும் விளக்குகின்றது. தனக்கு நேர்ந்த அனைத்து சோதனைகளையும் உள உறுதியுடனும் தன்னம் பிக்கையுடனும் எவ்வாறு அவர்கள் எதிர்கொண்டார்கள் என்பதை உணர்த்தி நிற்கின்றது. தன்னம்பிக்கைமிக்க உயர் மனோவலிமையின் வார்த்தைகளைத் தான் நாம் மேலே சிந்திப்பதற்காக முன்வைத்துள்ளோம். ஸூரா யூசுஃபை ஓதி யூசுஃப் நபியின் வரலாற்றைப் படிக்க முடியும்.

தனக்கிருக்கின்ற அறிவு, பாதுகாக்கும் ஆற்றல் பற்றி அரசனிடம் எடுத்துரைத்து நாட்டின் பிரதான அமைச்சுப் பதவியான நிதி மற்றும் பொருளாதார அமைச்சுப் பதவியை நபி யூசுஃப் அவர்கள் சிறைக் கைதியாக இருக்கும் நிலையில் துணிவோடு கேட்கிறார்கள்.

மாணவச் செல்வங்களே! முதலில் எம்மைப் பற்றி அறிந்து கொள்வது அவசியம். நம்மைப் பற்றி அறிவது என்பது பெயர், ஊர், பலம், பலவீனம், விருப்பு, வெறுப்பு, திட்டம், இலக்கு, பயணம், வளர்த்துக் கொள்ள வேண்டியது, தவிர்ந்து விட்டொதுக்க வேண்டியது என அனைத்தையும் அறிவதாகும். தத்துவஞானி சோக்ரடீஸ் இதனைத்தான் "உன்னையே நீ அறிவாய்" (Know yourself) எனக் குறிப்பிட்டார்.

தன்னம்பிக்கை வாழ்வின் வெற்றிக்கு வழி. தன்னம்பிக்கை உள்ளவனுக்கு வாழ்வில் தோல்வி என்பது கிடையாது. அவன் வெற்றி பெற்றால் அடுத்து என்ன என்று சிந்திப்பான். தோல்வி அடைந்தால் படிப்பினை பெறுவான். இதுதான் தன்னம்பிக்கையுள்ளவனின் பயணம்.

உலகில் சாதனை படைத்தவர்கள் அனைவரும் தன்னம்பிக்கையோடு தம் இலக்கு நோக்கி பயணித்தவர்கள்தாம். "முடியாது" என்று எதனையும் அவர்கள் கருதவில்லை. இன்றைய இளைய சமூகம் மடைமைக்கும் பகட்டுக்கும் மத்தியில் நிலை தடுமாறுகின்ற அவலத்தினை அவதானிக்க முடியுமாகவுள்ளது. அறிவுடைமையோடும் யதார்த்தங்களோடும் பயணிக்கும் துணிவு பெற வேண்டும். முயற்சியும் அறிவார்ந்த உழைப்பும் பிரயத்தனமும் செல்வாக்கும் பெற வேண்டும். தொடங்கிய மாத்திரத்திலேயே வெற்றியீட்ட வேண்டும் என எண்ணுவது பிழையாகும்; அது வாழ்வின் வசந்தத்தை வரட்சியாக்கிவிடும்.

"அல்லாஹ்வின் பேரருளில் நம்பிக்கை இழக்காதீர்கள்" எனும் அல்குர்ஆன் வசனம் எங்கள் சிந்தையைக் கவரட்டும்! ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்



# அல்குர்ஆன் கூறும் கதைகள்

அபூ ஹானிம்

**இதுவரையில்** நாம் இரண்டு நபிமார்களது வரலாற்றை இப்பகுதியில் கூறியிருக்கின்றோம். இறுதியாக நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது வரலாற்றை விளங்கிக் கொண்டோம். நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்குப் பிறகு அல்குர்ஆன் இறைத்தூதர் ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது பிரசாரப் பணியைக் குறிப்பிடுகின்றது. இவர் 'ஆத்' சமுதாயத்தைச் சார்ந்தவராவார்.

ஆத் எனப்படுபவர்கள் பழங்கால அரபு சமூகத்தார் ஆவர். அவர்கள் தென் அரேபியாவில் வாழ்ந்து வந்தனர். கிழக்கே பாரசீக வளைகுடாவின் வடக்கிலிருந்து மேற்கு செங்கடலின் தெற்குவரை அதன் எல்லை காணப்பட்டது. இன்றைய யமன் நாடு இதில் உள்ளடங்கும். ஆத் சமூகத்தின் பரம்பரை நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களோடு இணைகிறது. ஆத் சமூகத்தை நேர்வழிப்படுத்தவே அவர்களிலிருந்து ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைத் தன் தூதராக அல்லாஹ் நியமித்தான்.

## ஆத் சமூகத்தின் சகோதரர்

# ஹூத் (அலைஹிஸ்ஸலாம்)

ஆத் சமுதாயத்தினருக்கு வலிமை மிக்க உடலமைப்பை அல்லாஹ் வழங்கியிருந்தான். ஆத் சமூகத்தை விட பலமிக்க மனித சமூகத்தினர் இதற்கு முன்னர் படைக்கப்படவில்லை என்பதை அல்குர்ஆன் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. அவர்கள் அல்லாஹ் தமக்கு வழங்கிய உடல் வலிமையைப் பயன்படுத்தி நீண்ட பாரிய தூண்களைக் கொண்ட கூடாரங்களை அமைத்து வாழ்ந்து வந்தனர்.

இச்சமுதாயத்தினர் வாழ்ந்து வந்த இடம் தொடர்பாக குறிப்பிடப்படும் தகவல் தப்ஸீர் இப்னு ஜரீர் எனும் அல்குர்அன் விளக்கவுரை நூலில் பின்வருமாறு பதிவாகியுள்ளது:

யமன் தேசத்திலுள்ள ஹள்ரமவுத் என்ற பகுதியிலிருந்து அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைச் சந்திக்க ஒரு மனிதர் வந்தார். அவரிடம் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உங்கள் ஊரில் சிவப்பு நிற மண்மேடு மற்றும் மணல் குன்று, இலந்தை மரம், சுராக் மரம் ஆகியன இருக்குமே; அதன் அருகில் உத்மான் என்ற பெயருடைய ஓடை ஒன்று ஓடுமே; அதனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? எனக் கேட்டார்கள். அந்த மனிதர். "ஆம், நான் பார்த்திருக்கிறேன். நீங்களும் பார்த்தது போலவே வினவுகிறீர்களே?" என்று கேட்டார். அதற்கு அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் "அங்குதானே இறைத்தூதர் ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது அடக்கஸ்தலம் உள்ளது" என்றார்கள். உடனே அந்த மனிதர் "நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்றதும் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் "இல்லை இவ்வாறு நான் கேள்விப்பட்டேன்" என்றார்கள்.

அல்குர்ஆன் ஆத் சமூகத்தார் பற்றிக் குறிப்பிடும் செய்திகளை வைத்து நோக்குகின்றபோது யமனிலுள்ள ஹள்ரமவுத் எனும் இடத்திற்கு பொருந்துவதாக அமைகின்றது என ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியிருந்த அருளை மதித்து நன்றி உணர்வோடு வாழ ஆத் சமூகம் மறந்து விட்டது. ஆணவம், மமதை அவர்களது உள்ளங்களை ஆக்கிரமித்திருந்தது. தம்மைப் படைத்த படைப்பாளனின் வலிமையை உணர அவர்களது உள்ளம் மறுத்து விட்டது. நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது சமூகம் வெள்ளத்தால் அழிக்கப்பட்டதன் பின்னர் சிலை வணக்கத்தை ஆத் சமூகமே அறிமுகம் செய்தது. இதனால் இவர்கள் 'ஆத் அல்ஊலா' (முந்திய ஆத்) எனவும் அழைக்கப்படுகின்றனர்.

-தொடரும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ:

إِذَا جَاءَ رَمَضَانُ فُتِّحَتْ أَبْوَابُ الْجَنَّةِ وَغُلِّقَتْ أَبْوَابُ النَّارِ وَصُفِّدَتِ الشَّيَاطِيْنُ (مُتَّفَقٌ عَلَيْهِ)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ரமழான் வந்துவிட்டால் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்பட்டு நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்றன. மேலும், ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன." (அல்புகாரி, முஸ்லிம்)

அன்பின் மாணவச் செல்வங்களே! மீண்டும் ஒருமுறை ரமழானின் வசந்தத்தோடு ஹதீஸ் பூங்காவின் வாயிலாக சந்தித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினைத் தந்திருக்கின்ற அல்லாஹ் மிகப் பெரியவன்! இவ்விதழ் ஊடாக நாம் அல்லாஹ்வினால் மானுடர்களுக்கு பெரும் அருளாக வழங்கப்பட்டிருக்கின்ற ரமழான் பற்றி சிறிது நோக்கு வோம்.

ரமழானை நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமான எண்ணங்களோடு வரவேற்றிருப்போம். சிலருக்கு அது வெறுமனே உண்ணல் பருகலைத் தவிர்த்து இறுதியில் பெருநாள் என்ற கொண்டாட்டத்தோடு முடிந்து விடுகின்ற ஒரு சாதாரண நிகழ்வாக இருக் கலாம்; இன்னும் சிலருக்கு வெறுமனே ஒரு மாதகால பாடசாலை விடுமுறையும் புத்தாடைப் பெருநாளு மாக இருக்கலாம்; இன்னும் சிலருக்கு ஒரு மாதகால இறை செயற்பாட்டுடன் கூடிய பக்தி மாதமாக இருக் கலாம்.

இவ்வாறு பல எண்ணங்களோடு நாம் ரமழானை எதிர்நோக்கியிருந்த போதிலும்கூட உண்மையில் ரமழான் என்பது வரலாற்றில் பல்வேறு திருப்புமுனை களுக்கும் சாதனைகளுக்கும் சொந்தமான ஒரு மாதமாகவும் எண்ணிலடங்கா நன்மைகளை அல் லாஹ் தனது அடியானுக்கு வாரி வழங்குகின்ற மாதமாகவும் காணப்படுகின்றது.

"ஆதமுடைய மகன் செய்யும் ஒவ்வொரு செயலும் அவனுக்குரியது; நோன்பைத் தவிர. நோன்பு எனக்குரியது; அதற்கு நானே கூலி கொடுக்கிறேன். (காரணம்) தனது உணவையும் பானத்தையும் அவன் எனக்காக விடுகிறான்."

(அல்புகாரி, முஸ்லிம்)

அளவிலா நன்மை வழங்கப்படுகின்ற இம்மாதத்தில் மனிதன் நன்மைகள் செய்வதில் கூடிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதால் இம்மாதத்தில் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்பட்டு நரகத்தின் வாயில்கள் அடைக்கப்படுகின்றன. ஆகவே, நீங்கள் முண்டியடித்து சுவனத்தின் வாயில்களினூடாக செல் வதற்கு பாடுபடுங்கள் என்று மேற்கூறப்பட்ட ஹதீஸி னூடாக நபியவர்கள் ஆர்வமூட்டினார்கள்.

மேலும், ரமழான் மாத நோன்பு பசிக்கும் தாகத் திற்கும் அப்பால் மனிதனை ஆட்டிப் படைக்கின்ற ஷைத்தானின் தூண்டுதல்களான கட்டுக்கடங்காத உணர்ச்சிகள், ஆசைகள், ஆவேசங்கள், விருப்பு வெறுப் புக்கள் போன்றவற்றை நெறிப்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றது.

அத்தோடு ரமழான் பல முக்கிய வரலாற்று நிகழ் வுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சத்தியத் தையும் அசத்தியத்தையும் பிரித்தறிவிக்கின்ற குர் ஆனை அண்ணலார் அருட்கொடையாகப் பெற்றது இதே மாதத்தில்தான்.

இதே மாதத்தில் மரணம் எனும் எதிரியை முறிய டித்துவிட்டு பத்ருப் போர்க்களத்தில் வாழ்க்கை வெற்றி பெற்றது. எனவேதான் பத்ருப் போர்க்களம் 'யவ்முல் புர்கான்' என அழைக்கப்படுகின்றது.

மேலும், ரமழான் மாதத்தில் ஒருநாள் அண்ணலார் அவர்கள் தனது படை பரிவாரங்களுடன் யாருக்கும் கிட்டாத கண்ணியத்தையும் கௌரவத்தையும் சுமந்து கொண்டு மதிப்போடும் மாண்போடும் மக்கா பெரு நகருக்குள் நுழைந்தார்கள். ஒரு துளி குருதியையும் சிந்தாமல் இறைவனின் இல்லமான கஃபதுல்லாஹ்வை கைக்கொண்டார்கள்.

(8ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நாம்** ரமழான் மாதத்தில் இருந்துகொண்டே ரமழானில் இடம்பெற்ற பத்ர் பற்றி பார்த்துக் கொண்டிருக்கிறோம், அல்ஹம்துலில்லாஹ். ரமழான் நோன்பு ஓய்வுக்கும் தூக்கத்திற்கும் உரியது என்ற மனப்பதிவை அதன் வெளிப்பாடான எமது நடத்தையையும் இந்த பத்ர் எம்மிடமிருந்து தூக்கியெறிய வேண்டும், இன்ஷா அல்லாஹ்.



அதற்கு அவர்கள், "நீங்கள் எங்களுக்கு நிகரானவர்கள்தான். ஆனால், உங்களிடம் எங்களுக்கு எந்தத் தேவையும் இல்லை. நாங்கள் நாடி வந்திருப்பதெல்லாம் எங்கள் தந்தையுடைய சகோதரர்களின் மக்களைத்தான்" என்றனர். பின்பு அவர்களில் ஒருவன், "முஹம்மதே! எங்களது இனத்தில் எங்களுக்கு நிகரானவரை எங்களிடம் அனுப்பும்!" என்று கத்தினான். உடனே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்

"உபைதா இப்னு ஹாரிஸே! எழுந்து செல்லுங்கள்!"

"ஹம்ஸாவே! எழுந்து செல்லுங்கள்!"

"அலியே! எழுந்து செல்லுங்கள்!" எனக் கட்டளையிட்டார்கள்

இம்மூவரும் குறைஷிகளுக்கருகில் செல்ல, அவர்கள் "நீங்கள் யார்?" என்றனர். அவர்கள் தங்களைப் பற்றி சொன்னதும் "நீங்கள் எங்களுக்குப் பொருத்தமானவர்களே" என்றனர். உபைதா (ரழியல்லாஹு அன்ஹு) உத்பாவுடனும் ஹம்ஸா (ரழியல்லாஹு அன்ஹு) ஷைபாவுடனும் அலி (ரழியல்லாஹு அன்ஹு) வலீதுடனும் மோதினர்.

ஹம்ஸாவும் அலியும் தங்களது எதிரிகளுக்கு அவகாசம் கொடுக்காமல் அடுத்த வினாடியே அவ்விருவரையும் கொன்றுவிட்டனர். ஆனால், உபைதாவும் உத்பாவும் சண்டைசெய்து கொண்டதில் இருவருக்கும் பலத்த காயமேற்பட்டது. உபைதா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் கால் வெட்டுண்டு விழுந்தது. இதைக் கண்ட ஹம்ஸா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் உத்பா மீது பாய்ந்து அவனை வெட்டிக் கொன்றார்கள். அதற்குப் பிறகு உபைதாவை சுமந்து கொண்டு படைக்குத் திரும்பினார்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹு வஸல்லம்) அவர்கள் மிக நுணுக்கமாக ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான நபர்களைத் தெரிவு செய்தார்கள். அன்னார் தெரிவு செய்த அதேவேளை, தெரிவு செய்யப்பட்டவர்களும் துணிந்து முன்வந்தார்கள். பரஸ்பரம் அவர்களிடையே இத்தகைய இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தியதாலேயே ஒற்றுமையோடு போராடி வெற்றி பெற்றார்கள்.


# உரிய, உகந்த நபர்களைத் தெரிவு செய்தலும் முன்வருதலும்

ரமழானின் பிறை 8 அல்லது 12 இல் மதீனாவிலிருந்து நபியவர்களும் ஸஹாபிகளும் பத்ருக்குப் புறப்பட்டார்கள். பிறை 17ல் பத்ர் யுத்தம் ஆரம்பமானது. அவர்கள் 5 அல்லது 7 நாட்கள் ரமழானில் நோன்பு நோற்றவர்களாக யுத்தத்திற்காக பயணம் செய்துள்ளார்கள். இதுவரை நாம் யுத்தத்திற்கு முன்னரான நிகழ்வுகளைப் பார்த்தோம். இன்று யுத்த களத்திலிருந்து கற்றுக் கொள்வோம்.

பத்ரில் இரு படையினரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டபோது குறைஷிகளின் மிகத் தேர்ச்சி பெற்ற குதிரை வீரர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுமான உத்பா இப்னு ரபிஆ, ஷைபா இப்னு ரபிஆ, வலீது இப்னு உத்பா ஆகிய மூவரும் படைக்கு முன்னால் வந்தனர்.

இவர்களை எதிர்க்க அன்சாரி வாலிபர்களான அவ்ஃப் இப்னு ஹாரிஸ், முஅவ்வித் இப்னு ஹாரிஸ், அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் களத்தில் குதித்தனர். அவர்களிடம் குறைஷிகள் "நீங்கள் யார்?" என வினவ, அவர்கள் "நாங்கள் மதீனாவாசிகள்" என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk

# ஞாயிற்றுத் தொகுதி

சென்ற இதழ் தொடர்...




***அல்குர்ஆனில்*** 12ஆம் அத்தியாயம் 04ஆம் வசனத்தில் சூரியக் குடும்பத்தைக் குறிப்பது போன்றதொரு செய்தி கூறப்பட்டிருப்பதும் அதில் குறிப்பிடப் படும் கோள்களின் எண்ணிக்கையும் இங்கு கவனிக்கத்தக்கது. யூசுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் சிறுவயதில் கண்ட கனவொன்றைத் தமது தந்தைக்கு இவ்வாறு கூறுகிறார் ''என் தந்தையே! பதினொரு கோள்களும் சூரியனும் சந்திரனும் என்னை சிரம்பணிபவையாக நான் (கனவில்) கண்டேன்" என்று கூறினார்.

அல்லாஹ்வே அனைத்தையும் அறிந்தவன்!

ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள வியாழன், சனி, நெப்டியூன், யுரேனஸ் ஆகிய நான்கும் பூமியை விடவும் பெரியவை. மற்றையவை சிறியவை. புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி என்பன சூரிய ஒளியைப் பெற்றுப் பிரதிபலிப்பதால் பிரகாசம் மிக்க நட்சத்திரங்களைப் போன்று கீழ்வானில் அழகாகக் காட்சியளிக்கின்றன.

"நிச்சயமாக நாம் அடிவானத்தில் கிரகங்களை அமைத்துப் பார்ப்போருக்கு அதனை அலங்கரித்துள்ளோம்." (15:16)

ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்கள் யாவும் தமது பாதைகளை விட்டு விலகிச் செல்லாமலிருக்கக் காரணம் அவற்றிற்கு மத்தியில் காணப்படும் ஈர்ப்பு விசையும் ஒவ்வொரு கோளினதும் சுழற்சி மற்றும் சுற்றும் வேகமுமாகும். சூரியன் மையத்திலிருந்து பிற கோள்கள் அனைத்தையும் தன்பால் ஈர்த்துக் கொண்டுள்ளது. அதே போன்று ஒவ்வொரு கோளும் பிற கோள்களையும் தம் உப கோள்களையும் ஏனைய விண்பொருட்களையும் தம்பால் ஈர்த்து கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. இதனால் அவற்றின் சுழற்சி, சுற்றும் வேகத்தினால் தெறிப்படைந்து பிரபஞ்சத்தில் தொலைந்துவிடாது, பிற கோள்களுடன் முட்டி மோதாது ஒரு கட்டுப்பாட்டுடன் இயங்குகின்றன.

அதே போன்று கோள்கள் யாவும் மிக வேகமாகத் தம்மைத் தாமே சுற்றுவதாலும் சூரியனைச் சுற்றி வருவதாலும் அபரிமிதமான சூரியனின் ஈர்ப்புச் சக்திக்கு இழுபட்டுச் செல்லாமல் தமது பாதையில் நிலைத்திருக்கின்றன. இவ்வாறு அல்லாஹ் கோள்களை ஈர்ப்பாற்றலால் கட்டுப்படுத்தி வைத்துள்ளான். சூரியன் பூமியைவிடவும் 28 மடங்கு அதிகமான கவர்ச்சி விசையைக் கோள்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் மீது பிரயோகித்துக் கொண்டிருக்கின்றது. இதனால்தான் கோள்கள் ஒன்றுடன் ஒன்று மோதாமலும் தமது பாதைகளிலிருந்து விலகி விடாமலும் இயங்குகின்றன. அத்தோடு அவை நேர் பாதையில் செல்லாது சுற்றுப் பாதையில் செல்வதற்கும் சூரியனின் இத்தகைய ஈர்ப்பு விசையே காரணம். அல்லாஹ் கூறுகின்றான்.

"வானங்களும் பூமியும் அவை இரண்டும் விலகி விடாதவாறு நிச்சயமாக அல்லாஹ்வே தடுத்துக் கொண்டிருக்கின்றான். அவை இரண்டும் விலகுமா யின் அதற்குப் பிறகு வேறெவரும் அவ்விரண்டையும் தடுத்து நிறுத்த முடியாது." (35:42)

எமது சூரியனும் ஒரு நட்சத்திரம் என்ற வகை யில் இந்த நட்சத்திரத்தைச் சூழ எட்டுக் கோள்களும் உப கோள்களும் இருக்கின்றன. எமது பால்வீதி எனும் கெலக்ஸியில் மாத்திரம் 250 பில்லியனுக்கும் அதிகமான நட்சத்திரங்கள் இருக்க வேண்டுமென விஞ்ஞானிகள் கூறுகின் றனர். எமது பால்வீதி போன்று அண்டத்தில் 300 மில்லியனுக்கும் அதிகமான கெலக்ஸிகள் இருக் கின்றன. சற்று சிந்தித்துப் பாருங்கள்! இத்துணை கெலக்ஸிகளிலும் எத்தனை எத்தனை நட்சத்திரங் கள் இருக்கும்! அத்தனை நட்சத்திரங்களுக்கும் எத்தனை கோள்கள், உப கோள்கள் இருக்கும்!

இதனால்தான் இப்பிரபஞ்சத்திலுள்ள எண்ணி லடங்காத கோள்களில் சிறிய புள்ளிபோன்ற கோளான எமது பூமியில் மட்டும்தான் உயிர்கள் வாழ்கின்றன என்று சிந்திக்க முடியாதுள்ளது. எமது பிரபஞ்சத்தில் காணப்படும் இலட்சக்கணக் கான, மில்லியன்கணக்கான ஞாயிற்றுத் தொகுதிகளில் உயிர் வாழ்க்கைக்கு உகந்த கோள் கள் இருக்கலாம் என்ற இத்தகைய கருதுகோளின் அடியாகவே விஞ்ஞானிகள் நம்பிக்கை இழக்காது தொடர்ந்தும் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள னர். எமது பால்வீதியில் மனிதன் வாழ ஏற்ற கிர கங்கள் ஆயிரக்கணக்கில் இருப்பதாக பிரான்சின் வானியல் வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். அத்த கைய கோள்களிலும் எம்மைப் போன்ற அல்லது எம்மைவிட அறிவார்ந்த உயிரினங்கள் வாழலாம் என்பதுவே விஞ்ஞானிகளின் ஊகம். அல்லாஹ்வே யாவற்றையும் அறிந்தவன்.

ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள எட்டுக் கோள் களும் அவற்றின் பருமனும் சுழற்சி மற்றும் சுற்றும் வேகங்களும் ஈர்ப்பு விசையாற்றல்களும் உண் மையில் பல்வேறு துல்லியமான திட்டமிடல்களு டனே அமைக்கப்பட்டுள்ளன. ஒருவகையில் அவை புவியின் இருப்புக்குப் பக்கபலமாய்க் காணப்படுகின்றன. எட்டுக் கோள்களைப் பற்றியும் சற்று அறிந்துகொள்வது இறை வல்லமையை உணர்த்தும் என்று நினைக்கின்றேன்.

**1. புதன்:** புதன் கிரகம் சூரியனுக்கு மிகவும் அண்மையில் முதலாவது நீள்வட்டப் பாதையில் அமைந்துள்ளது. அனைத்துக் கிரகங்களிலும் புதனே மிகச் சிறிய கிரகம். சந்திரனைவிடவும் சிறியது. இதன் விட்டம் 4800 Kmஆகும். புதன் செக்கனுக்கு 30 மைல் வேகத்தில் சூரியனைச் சுற்று கின்றது. இது ஒரு முறை சூரியனைச் சுற்றிவர 88 நாட்கள் செல்கின்றன. இதனால் புதனில் நீண்ட நாட்களுக்கு இரவும் நீண்ட நாட்கள் பகலாகவும் இருக்கும்.

**2. வெள்ளி:** சூரியனிலிருந்து அடுத்த பாதை யில் இருப்பது வெள்ளிக் கிரகமாகும். இது பருமனிலும் திணிவிலும் பூமியை ஓரளவிற்கு ஒத்திருக்கின்றது. இதன் விட்டம் 12,320 Km ஆகும். இக்கிரகம் சூரியனை ஒரு முறை சுற்றிவர 224 நாட்கள் செல்கின்றன. இக்கிரகத்தைச் சுற்றி வெண்மேகப் படலங்கள் அமைந்திருக்கின்றன.

**3. பூமி:** மூன்றாவது பாதையில்தான் நாம் வாழும் பூமி காணப்படுகின்றது. ஞாயிற்றுத் தொகுதியிலேயே உயிர் வாழ்க்கைக்கு உகந்த இடமாக பூமிப் பந்து காணப்படுகின்றது. பூமி யின் விட்டம் 12,683Kmஆகும். பூமி தன்னைத் தானே சுற்றிக்கொள்ள ஒரு நாளும் சூரியனைச் சுற்றிவர 365 நாட்களும் செல்கின்றன.

**4. செவ்வாய்:** அடுத்த பாதையில் இருப்பது செவ்வாய்க் கிரகம். சூரியனை இக்கிரகம் ஒரு முறை சுற்றி வருவதற்கு 687 நாட்கள் செல்கின்றன. தன்னைத்தானே சுற்றிக்கொள்ள ஒரு நாளும் 37 நிமிடங்களும் எடுக்கின்றன. பூமி 23 1/2 பாகைக் கோணத்தில் சரிந்திருப்பதுபோன்று செவ்வாய் 24 பாகைக் கோணத்தில் சரிந்து காணப்படு கின்றது. தொலைநோக்கியால் பார்க்கும்போது இக்கிரகம் செம்மஞ்சள் நிறத்தில் காட்சி தரும். செவ்வாயில் உயிரினங்கள் இருக்கின்றனவா என் றும் அதில் வாழ முடியுமா என்றும் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் விட்டம் 4216 மைல்களாகும்.

**5. வியாழன்:** ஐந்தாவது நீள்வட்டப் பாதை யில் இருப்பது வியாழன் கோள். இது ஏனைய கிரகங்களைவிடவும் பருமனில் பெரிது என்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் ராட்சதக் கிரகம் (Giant Planet) என்றும் அழைக்கப்படுகின்றது. இது தன்னைத்தானே ஒரு முறை சுற்ற ஒன்பது மணி நேரங்களும் 55 நிமிடங் களும் செல்கின்றது. அவ்வளவு வேகமாகச் சுழல் கின்றது. சூரியனை ஒரு முறை சுற்றி முடிக்க 11 வருடங்களும் 315 நாட்களும் செல்கின்றன. வியாழனுக்கு 16 உபகோள்கள் காணப்படு கின்றன. இதன் விட்டம் 88,700 மைல்களாகும்.

*6. சனி:* சனிக்கோள் சூரியனிலிருந்து ஆறாவது நீள்வட்டப் பாதையில் சுற்றுகிறது. சூரியக் குடும் பத்தில் இதுவே இரண்டாவது பெரிய கோள். இதனைச் சூழ பனி மற்றும் பாறைத் துகள்களா லான வலையமொன்று காணப்படுகின்றது. இதற்கு 61 உப கிரகங்கள் காணப்படுகின்றன. இதன் விட்டம் 75,000 மைல்களாகும்.

*7. யுரேனஸ்:* 1781 ஆம் ஆண்டு வரை ஞாயிற் றுத் தொகுதியில் ஆறு கோள்களே உள்ளதாக நம் பப்பட்டது. அதன்பின் வில்லியம் ஹர்ஷா என்பவ ரால் யுரேனஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் விட்டம் 48,000Km ஆகும். தன்னைத்தானே சுற்ற 10 மணி 48 நிமிடங்கள் எடுக்கின்றன. ஒரு முறை சூரியனைச் சுற்றிவர 84 வருடங்கள் செல்கின்றன. இதற்கு 5 உப கிரகங்கள் உள்ளன.

*8. நெப்டியூன்:* நெப்டியூன் எட்டாவது பாதை யில் சுற்றுகிறது. இது 1846ம் ஆண்டு பொலின் விண்வெளி ஆய்வு மையத்தால் கண்டுபிடிக்கப் பட்டது. 165 ஆண்டுகளுக்கு ஒரு முறை இது சூரியனைச் சுற்றி வருகின்றது. அதேபோன்று தன்னைத் தானே சுற்ற 15 மணி 40 நிமிடங்கள் செல்கின்றன. இக்கிரகம் சூரியனிலிருந்து மிகத் தொலைவில் இருப்பதால் எப்போதும் குளிரா கவே காணப்படுகின்றது. இரண்டு உப கிரகங்க ளும் காணப்படுகின்றன. இதன் விட்டம் 27,700 மைல்களாகும்.

அடுத்து புளூட்டோ: ஞாயிற்றுத் தொகுதியில் ஒரு கோளாக ஆரம்பத்தில் சேர்க்கப்பட்டிருந் தாலும் 2006 ஆம் ஆண்டு அது நீக்கப்பட்டது. புளூட் டோ 1930 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட் டது. இது சூரியனிலிருந்து 576 கோடி Kmகளுக்கு அப்பால் அமைந்துள்ளது. இதன் விட்டம் 3600 மைல்களாகும்.

அல்லாஹ் இந்த ஞாயிற்றுத் தொகுதியைப் படைத்த நாள் முதல் அது எந்த முரண்பாடுமின்றி எவ்வளவு அழகாக அமைதியாக இயங்குகின்றது என்று பாருங்கள். அல்லாஹ் இட்ட கட்டளைப் படி அவை தத்தமது அச்சுகளில் தமக்கே உரிய அலாதியான வேகங்களில் சுற்றிச் சுழன்று வருகின் றன. கட்டுப்பாடு, அமைதி எனும் இரண்டும் மிக முக்கியமானவை. இதனை பிரபஞ்சம் முழுக்க கண்டுகொள்ளலாம். இஸ்லாம் என்ற பதத்தின் பொருளும்கூட கட்டுப்பாடு, அமைதி என்பது தான். எனவே முழுப் பிரபஞ்சமும் இஸ்லாமாகி, முஸ்லிமாகி உள்ளது என்றால் பிழையாகாது. இதனையே அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகின்றான்.

"வானம், பூமியில் உள்ள அனைத்துப் படைப்புக ளும் இஸ்லாமாகி (கட்டுப்பட்டு) விட்டன." (3:83)

---

4ஆம் பக்க தொடர் (ஹதீஸ் பூங்கா...)

வரலாற்றுத் தடம்பதித்த பல சரித்திரங் களுக்கும் சாதனைகளுக்கும் சொந்தமான இந்த ரமழான் ஒவ்வொரு வருடமும் எம்மிடம் பல் வேறு எதிர்பார்ப்புக்களோடு வந்து செல்கின்றது. இந்த வருடமாவது எந்த நோக்கத்திற்காக ரமழான் புனிதமிக்க மாதமாகவும் நன்மைகளின் மாதமாகவும் வெற்றியின் மாதமாகவும் காணப் படுகின்றதோ அதன் தாத்பரியங்களை மாண வர்களாகிய நாமும் சரியாக விளங்கிக் கொண்டு அதன் முழுப் பயனையும் குறைவின்றிப் பெற்று அல்லாஹ்வின் நேசத்திற்குரிய அடியார்களாகி சுவனத்தின் சொந்தக்காரர்களாக ஆகுவதற்கு முயற்சிப்போமாக!


## அகரம் வாசகர்களுக்கு நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துக்கள்!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸலாம் சொல்லுவோம்




***ஒரு மனிதர்*** "இஸ்லாத்தில் சிறந்தது எது?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "உணவளிப்பீராக, மேலும் உமக்குத் தெரிந்தவருக்கும் தெரியாதவர்களுக்கும் ஸலாம் கூறுவீராக" என்று கூறினார்கள்.

எம்மிடையே இறுக்கமான ஒரு பிணைப்பையும் ஒற்றுமையையும் உருவாக்க வேண்டுமென்பதற்காகவே இஸ்லாம் எடுத்தளிக்கும் இரு பண்புகளாக உணவளித்தலும் ஸலாம் கூறுவதும் காணப்படுகிறது. பெற்றோர், பிள்ளைகள், உற்றார் உறவினர், ஏழைகள் வழிப்போக்கர்கள், ஆகிய எல்லோருக்கும் உணவளித்து அவர்களின் பிரார்த்தனையைப் பெறலாம்.

நண்பர்களுக்கு உணவளிப்பதன் மூலம் அவர்களின் நட்பையும் எதிரிகளுக்கு உணவளித்து அவர்களோடு இணக்கத்தையும் மிருகங்களுக்குகூட உணவளித்து எம் உள்ளத்தில் பரிவு உணர்ச்சியையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதிகம் ஸலாம் கூறுவதால் பாதுகாப்பு உயர்ச்சி அடையலாம். சச்சரவுகள் நீங்கி பாதுகாப்புப் பெற்று, எங்கள் மத்தியில் அன்பும் நல்லுறவும் நிலவ வழி செய்யலாம். அதிகம் ஸலாம் கூறுவதன் மூலம் எம் உறவும் வலுப் பெற்று ஒற்றுமையும் பலமடையும். ஸலாம் கூறுவதால் இறை திருப்தியும் சுவன வாழ்வும் கிட்டும். ஸலாம் கூறுவதை நீண்டதாக அமைத்துக் கொள்வது நன்மையாகும்.

"அஸ்ஸலாமு அலைக்கும்"

"அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்"

"அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு" ஆகிய மூன்றில் ஒவ்வொன்றிற்கும் 10,20,30 நன்மைகள் கிடைக்கும்.

விஷேடமாக சிறு பிள்ளைகளுக்கு நாம் ஸலாம் சொல்ல வேண்டும். சூறா அந்நிஸாவில் 86ஆவது வசனத்தில் "எவரேனும் உங்களுக்கு ஸலாம் கூறினால் அதைவிட அழகான வாக்கியத்தைக் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் கணக்கெடுப்பவனாக இருக்கிறான்" என சிலாகித்துக் கூறப்பட்டுள்ளது இதிலிருந்து நாம் தெரிந்தவர்களுக்கு மட்டுமல்ல, தெரியாதவர்களுக்கும் சுவனம் செல்ல வழிகாட்டக்கூடிய அமலாக ஸலாம் சொல்வதைத் தெரிந்து கொள்கிறோம்.

ஸலாம் என்ற சாந்தி மொழியைப் பரப்பி நிறைய நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முற்படுவோம்.

— ஏ.எஸ்.எப். அம்ரா, வெலம்பொட

# அறிந்து கொள்ள முத்துக்கள் சில

மலக்குகள் தொழுமிடம் எது? பைத்துல் மஃமூர்

தொழுகை கடமையாக்கப்பட்டது நபித்துவத்தின் எத்தனையாம் ஆண்டு? 11ஆம் ஆண்டு

சுவர்க்கத்தின் திறவுகோல் எது? தொழுகை

ஈமானின் வகைகள் எவை? ஈமான் முஜ்மல், ஈமான் முபஸ்ஸல்

***எச்.எப். முப்லிஹா, தரம்: 10***
***கம்பிரிகஸ்வெவ, மனாருல் உலூம் ம.வி***

# உங்களுக்குத் தெரியுமா?

- யகிரிக்கெட் விளையாட்டின் ஆரம்பம் எது? இங்கிலாந்து
- முதலாவது டெஸ்ட் போட்டி எந்தெந்த நாடுகளுக்கிடையில் நடைபெற்றது? இங்கிலாந்து-அவுஸ்திரேலியா
- உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி எப்போது அரம்பமானது? 1975ஆம் ஆண்டு
- உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது? நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை
- உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற நாடுகள்? அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள்
- ஒரே ஓவரில் ஆறு சிக்ஸர்களை அடித்த வீரர்கள் யார்? காபீல் ஸோபர்ஸ், ரவி சாஸ்திரி, யுவ்ராஜ் சிங்,
- கிரிக்கெட் பந்தின் நிறை என்ன? 5.75 அவுன்ஸ் (163 கிராம்)

***ஹப்ஸா ஹுஸைன்***
***தி/அல் பதாஹ் மு.ம.வி, நிலாவெளி***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வண்ணக் கோலங்கள்

| | |
|---|---|
| பழுப்புப் புரட்சி - | கோதுமை மா உற்பத்திப் பெருக்கம் |
| பசுமைப் புரட்சி - | விவசாய உற்பத்திப் பெருக்கம் |
| வெண்மைப் புரட்சி - | பால் உற்பத்திப் பெருக்கம் |
| நீலப் புரட்சி - | மீன், கடல், உயிர் உற்பத்திப் பெருக்கம் |
| மண்ணிறப் புரட்சி - | மரபு சாரா எரிபொருள் பெருக்கம் |
| மஞ்சள் புத்தகம் - | பிரான்ஸ் அரசாங்க அறிக்கைகள் |
| பச்சைப் புத்தகம் - | இத்தாலிய, ஈரானிய அரசாங்க அறிக்கைகள் |
| ஒரேஞ்ச் புத்தகம் - | நெதர்லாந்து அரசாங்க அறிக்கைகள் |
| நீல மாளிகை - | தென் கொரிய நாட்டின் அதிபர் மாளிகை |
| வெள்ளை மாளிகை - | அமெரிக்க நாட்டின் அதிபர் மாளிகை |

***தாஜீர் ஹபீல் அஹமட்***
***தரம்: 11 கமு/சது/ அஷ்ரப் மத்திய கல்லூரி இறக்காமம்***

## தமிழ் இலக்கிய முன்னோடிகள்

| | |
|---|---|
| ❑ தமிழ் மாமுனி - | திருவள்ளுவர் |
| ❑ தமிழ் மூதாட்டி - | ஔவையார் |
| ❑ தமிழ் தாத்தா - | உ.வே. சாமிநாதய்யர் |
| ❑ தமிழ் வால்டர் ஸ்காட் - | கல்கி |
| ❑ தமிழ் இசைக் குயில் - | எம்.எஸ். சுப்புலட்சுமி |
| ❑ முத்தமிழ் வித்தகர் - | விபுலானந்த அடிகள் |
| ❑ தமிழ் பெர்ணாட்ஷா - | வைத்தியர். மு. வரதராசனார் |
| ❑ தமிழ் குடிமகன் - | சாத்தையா |
| ❑ தமிழ் காவலர் - | கி.ஆ.பெ. விசுவநாதம் |

***தாஜீர் ஹபீல் அஹமட், தரம்: 11***
***கமு/சது/ அஷ்ரப் மத்திய கல்லூரி, இறக்காமம்***

## உலக நாடுகளின் பழைய, புதிய பெயர்கள்



| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| இங்கிலாந்து | ஐக்கிய இராச்சியம் |
| ஸ்பானியா | ஸ்பெயின் |
| ஒல்லாந்து | நெதர்லாந்து |
| பர்மா | மியன்மார் |
| பாரசீகம் | ஈரான் |
| மொசப்பத்தேமியா | ஈராக் |
| பாரதம் | இந்தியா |
| அபீசீனியா | எதியோப்பியா |
| கம்பூச்சியா | கம்போடியா |
| கோல் நாடு | பிரான்ஸ் |
| கிரேக்கம் | கிறீஸ் |
| ஒரியானா | ஆப்கானிஸ்தான் |
| போமோசா | தாய்வான் |
| தென் ரொடிசியா | சிம்பாபே |
| சீயம் | தாய்லாந்து |
| வட ரொடீசியா | ஸாம்பியா |

***எம்.எப். ஸஹ்றா, தரம்: 8***
***அல்மனார் மத்திய கல்லூரி,***
***மருதமுனை***

## விஞ்ஞானக் கருவிகள்



| | |
|---|---|
| *ரிச்டர் அளவுத் திட்டம்* | *- பூமி அதிர்ச்சியை அளத்தல்* |
| *ஓடியோ மீற்றர்* | *- ஒளியின் திறனை அளத்தல்* |
| *லக்போ மீற்றர்* | *- பாலிலுள்ள தண்ணீரை அளத்தல்* |
| *கலோரிப் பெறுமான மீற்றர்* | *- உடல் கொள்ளும் உணவுப் பொருட்களின் வெப்பத் திணிவை அளத்தல்* |
| *பாரோ மீற்றர்* | *- காற்றின் அமுக்கம், நழுவு வீதத்தை அளத்தல்* |
| *ஆடியோ மீற்றர்* | *- ஒலியின் வலிமையை, அளவை அளக்க* |
| *அனீயோ மீற்றர்* | *- காற்றின் வேகம், திசையை அளத்தல்* |
| *ரேடார் கருவி* | *- விமானத்தின் திசை, தூரம் உட்பட பல்வேறு தேவைகளையும் பதித்தல்.* |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அகரம்

## புகழ் பெற்ற பெரியோர்களின் புகழ் பெற்ற நாமங்கள்

| | |
|---|---|
| வங்காளத்தின் சிங்கம் | - முஜிபுர் ரஹ்மான் |
| கவிக் குயில் | - சரோஜினி நாயுடு |
| இளவரசி | - எலிசபத் |
| இரும்புச் சீமாட்டி | - மார்க்கிரட் தட்சர் |
| குருதேவ் | - ரவீந்திர நாத் தாகூர் |
| பாபுஜி (தேசத்தின் தந்தை) | - காந்தி அடிகள் |
| நாவலர் | - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் |
| சிறு கதை மன்னன் | - புதுமைப் பித்தன் |
| எல்லைக் காந்தி | - கபார் கான் |
| ஆசியாவின் குயில் | - லதா மங்கேஷ்கர் |
| தீபமேந்திய சீமாட்டி | - புளோரோன்ஸ் நைற்றிங்கேர்ல் |
| காஷ்மிர் சிங்கம் | - ஷேக் அப்துல்லாஹ் |
| ராஜாஜி | - ராஜகோபல சாரியார் |

***எம்.ஐ.எப். இஸ்ரத்***
***இ/ஜெய்லானி தேசிய பாடசாலை, பலாங்கொடை***

## பழமொழியும் பொருநெறையும்

அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
- விடா முயற்சி

அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்
- உத்தம நட்பு

ஆழமறியாது காலை விடாதே
- ஆராய்ந்து செய்தல்

இட்டுக் கெட்டார் எங்குமில்லை
- தர்மம் செய்து கெட்டவர் இல்லை

இளங் கன்று பயமறியாது
- வாலிபத் துணிவு

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
- திருப்தியற்ற மனம்

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
- சிறு வயதில் பழகாதது முதுமையிலும் வராது

***எல். அகீலா பானு***
***பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.***

## உலக நாடுகளின் தேசியச் சின்னங்கள்

| | |
|---|---|
| அமெரிக்கா | - தங்கத் தடி |
| அவுஸ்திரேலியா | - கங்காரு |
| அயர்லாந்து | - ஹப்ரக் மலர் |
| பிரான்ஸ் | - அல்லி மலர் |
| பிரித்தானியா | - ரோஜா மலர் |
| கனடா | - வெள்ளை மலர் |
| டென்மார்க் | - கடற்கரைச் செடி |
| இந்தியா | - சிங்கத்தின் தலை |
| ஈரான் | - ரோஜா மலர் |
| யப்பான் | - கூட்டுப் புழு |
| பாகிஸ்தான் | - பிறை |
| ஜெர்மனி | - கான் பூ |
| ஸ்பெய்ன் | - கருடன் |
| சுவிட்சர்லாந்து | - இடல்விஸ் மலர் |
| பெல்ஜியம் | - அசலியா மலர் |
| ரூமேனியா | - பூவரசம் பூ |
| எகிப்து | - தாமரைப் பூ |
| சீனா | - திராட்சை மலர் |
| போலந்து | - சோலி மலர் |
| ஈராக் | - சிவப்பு ரோஜா |

***எம். ஜாஹரா பர்வின்***
***அல்/அஷ்ரப் ம.க, இறக்காமம்***

## மனித உடல் பற்றிய தகவல்கள்

- கண் இமைக்கும் நேரம் - **75 மில்லி செக்கன்**
- ஒரு நிமிடத்துக்குப் பேசக்கூடிய சொற்கள் - 150
- உடலின் மென்மையான சருமம் - கண் இமை (1mm)
- மனிதக் கண்களின் எடை - 1.5 அவுண்ஸ்
- கண்களை இமைக்கும் இடைவெளி - 6 செக்கன்களுக்கு ஒரு முறை
- மனித நாக்கு உணரும் சுவைகள் - 500
- உணர்வு அதிகமுள்ள கைவிரல் - **சுட்டு விரல்**
- கண்களால் பிரித்தறியக்கூடிய நிறங்களின் எண்ணிக்கை - 17000
- மனிதத் தோலின் மொத்தப் பரப்பு - **18 சதுர மீற்றர்**
- மூளையினை இயக்கும் நரம்புகள் - **12 கோடி**
- ஒரு தடவை இதயம் துடிக்க எடுக்கும் நேரம் - 0.8 **வினாடி**
- தலை முடியின் உண்மையான நிறம் - **வெள்ளை** (மெலனின் எனும் பொருள் சேர்வதால் கறுப்பாகிறது)

***எஸ்.எச். ரீஷ்மன் ஷிபா***
***கமு/ அல் மிஸ்பாஹ் ம.வி.***
***கல்முனைனக்குடி***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில்

اللغة العربية

# அரபு மொழி

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

## اَلْحَالُ

அரபு இலக்கணத்தில் செயல் நடந்த அமைப்பை விளக்க பயன்படுத்தப்படும் இலக்கண விதியை اَلْحَالُ 'நிலைமை' என்று அழைக்கிறோம். حَالٌ என்ற சொல்லுக்கு நிலைமை என்று பொருள்படும். ஒரு வாக்கியத்தில் فَاعِلٌ (கர்த்தா) அல்லது اَلْحَالُ (செயப்படு பொருள்) என்பனவற்றின் செயல் எவ்வாறு இருந்தது என்பதனை விளக்குவது مَفْعُوْلٌ بِهِ என குறிக்கப்படும்.

**இலக்கண விதி:**

- اَلْجُمْلَةُ بَعْدَ الْمَعْرِفَةِ حَالٌ
- குறிப்பிட்டுக் காட்டும் சொல்லை அடுத்து வரும் வசனம் اَلْحَالُ நிலையில் இருக்கும்.

**விளக்கம்:** வாக்கியத்தில் மஃரிபாவாக இருக்கும் فَاعِلٌ ஐ அல்லது மஃரிபாவான مَفْعُوْلٌ بِهِ ஐத் தொடர்ந்து வரும் வசனப் பகுதி اَلْحَالُ ஆக அமையும்.

### மஃரிபாவான فَاعِلٌ ஐ அடுத்து வரும் வசனப்பகுதி:

| | |
|---|---|
| خَرَجَ الْمُدَرِّسُ يُفَكِّرُ | ஆசிரியர் சிந்திக்கின்ற நிலையில் வெளியேறினார். |
| اِسْتَيْقَظَ الطِّفْلُ يَبْكِيْ | குழந்தை அழுத நிலையில் விழித்தது. |
| اِنْتَظَرَ الرَّجُلُ الْحَافِلَةَ يَقُوْمُ | மனிதன் நின்ற நிலையில் பஸ்வண்டிக்காக காத்திருந்தான். |
| أَكَلَتِ الْبِنْتُ تَجْلِسُ | சிறுமி உட்கார்ந்து சாப்பிட்டாள். |
| يُرَاجِعُ الطُّلَّابُ الدُّرُوْسَ يَجْلِسُوْنَ | மாணவர்கள் உட்கார்ந்த நிலையில் பாடங்களை மீட்டுகிறார்கள். |
| يَعْمَلُ الْفَلَّاحُ فِيْ الْحَدِيْقَةِ يَقُوْمُ | விவசாயி தோட்டத்தில் நின்று கொண்டு வேலை செய்கிறான். |

### மஃரிபாவான مَفْعُوْلٌ بِهِ ஐ தொடர்ந்து வரும் வசனப்பகுதி اَلْحَالُ ஆக அமையக்கூடிய வசனங்கள்

**உதாரணம்:**

| | |
|---|---|
| رَأَيْتُ الطَّالِبَ يَقْرَأُ الْكِتَابَ | புத்தகத்தை வாசிக்கின்ற நிலையில் மாணவனைக் கண்டேன். |
| رَأَيْتُ الْمُدَرِّسَ يَدْخُلُ الصَّفَّ | வகுப்புக்குள் நுழையும் நிலையில் ஆசிரியரைக் கண்டேன். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... நூலகம்
... ஆவணகம்

மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் நிலையில் சிறுவர்களை அழைத்தேன்.

دَعَوْتُ الأَوْلَادَ يَلْعَبُوْنَ فِيْ الْمَلْعَبِ

இந்த மாணவன் வகுப்பிலிருந்து வெளியேறும் நிலையில் அதிபர் அழைக்கிறார்.

يَدْعُوْ الْمُدِيْرُ هَذَا الطَّالِبَ يَخْرُجُ مِنَ الصَّفِّ

விவசாயி வயலில் வேலை செய்து கொண்டிருக்கக் கண்டேன்.

رَأَيْتُ الفَلاَّحَ يَعْمَلُ فِيْ الْحَقْلِ

பாதையில் வாகனம் பற்றி எரிவதைக் கண்டேன்.

رَأَيْتُ السَّيَّارَةَ فِيْ الطَّرِيْقِ تَحْتَرِقُ

நகரத்தில் உலாவும் நிலையில் எனது சகோதரனை எனது நண்பன் கண்டான்.

رَأَى صَدِيْقِي أَخِي يَتَجَوَّلُ فِيْ الْمَدِيْنَةِ

## وَاوُ الْحَالِ

حَالٌ உடைய நிலையைக் காட்டும் و அடையாளம் கொண்ட فَاعِلٌ – فِعْلٌ ஒரு வாக்கியத்தில் اَلْجُمْلَةُ الإِسْمِيَّةُ வான ஒரு வாக்கியத்தை இணைக்கப் பயன்படுத்தப்படும் الوَاوُ என்ற எழுத்து وَاوُ الْحَالِ என்ற நிலையில் அமையப் பெற்றிருக்கும்.

ஆசிரியர் சிந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில் வகுப்பிலிருந்து வெளியேறினார்.

خَرَجَ الْمُدَرِّسُ مِنَ الصَّفِّ وَهُوَ يُفَكِّرُ

வாக்கியம்

وَاوُ الْحَالِ — الْجُمْلَةُ الإِسْمِيَّةُ

சிறுவன் சப்தமிட்ட நிலையில் விளையாடினான். ✓ لَعِبَ الوَلَدُ وَهُوَ يَصِيْحُ

சிறுவன் சப்தமிட்டுக் கொண்டு விளையாடினான். ✗ لَعِبَ الْوَلَدُ وَيَصِيْحُ

وَاوُ الْحَالِ ஐ காட்டக்கூடிய اَلْحَالُ ஐக் காட்டக்கூடிய வசனம் முதலாவது வசனமாகும். ஏனெனில், فَاعِلٌ – فِعْلٌ வசனத்தை அடுத்து வந்திருக்கின்ற الوَاوُ எழுத்தானது பெயர்ச்சொல்லில் ஆரம்பமாகும் வசனத்துக்கு முன்னால் வந்திருப்பதனால் அவ்வசனம் وَاوُ الْحَالِ இலக்கணச் சட்டத்தை உள்ளடக்கிய வாக்கியமாகும்.

இரண்டாவது வசனம் பிழையானது. ஏனெனில், இரண்டாவது வசனத்தில் வந்திருக்கும் الوَاوُ எழுத்தானது وَاوُ الْحَالِ ஆக அமைய மாட்டாது. அந்த الوَاوُ என்ற எழுத்துக்குப் பின்னால் வந்திருக்கின்ற வாக்கியம் اَلْجُمْلَةُ الإِسْمِيَّةُ ஆக அமையவில்லை.

ஆசிரியர் வகுப்புக்குள் நுழையும் நிலையில் மாணவர்கள் எழுந்து நிற்கிறார்கள்.

A يَقُوْمُ الطُّلاَّبُ وَالْمُدَرِّسُ يَدْخُلُ الصَّفَّ ✓


حَالٌ சட்டத்தைக் காட்டும் الوَاوُ அடையாளம்

B يَقُوْمُ الطُّلاَّبُ وَيَدْخُلُ الْمُدَرِّسُ الصَّفَّ ✗

இந்த வசனம் وَاوُ الْحَالِ கொண்ட சட்ட வசனமாக அமையவில்லை. ஏனெனில், و என்ற எழுத்தை அடுத்து வந்திருக்கும் வசனம் الْجُمْلَةُ الإِسْمِيَّةُ ஆக அமையவில்லை.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Sister Rumman

## 'I learn every day'

**Assalamu alaikkum my dear friends,**

Takabbal Allahu Minnah Wa Minkum!

Happy Eid Mubaraq!!

I hope all of you had a fruitful Ramadan this time. Do you know what makes Ramadan and Eidul Fitr special?

Of course, the Holy Quran!



The Holy Quran is the Guidance Allah sent down to all of us because of His endless mercy.


He speaks to our heart through it, do you feel that dear friends?

Every day, when we recite the verses of the Holy Quran , we should remember that it's exclusively for us!!

## Now I want to check your knowledge on The Quran

*Answer this simple quiz.*

01. How many chapters are there in the Quran?
02. How many verses does Soorah al- Fathiha contain?
03. What are the chapter number and verse number of 'Aayatul Kursee'?
04. Which Soorah speaks about the elephants?
05. Which is your favourite Soorah, and why?



***Wasn't it easy friends??***

**I know that you all love the Holy Quran a lot.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Now let's look at some Eidul Fitr Rituals

- Congregational ( jamath) eid prayer in an open ground early in the morning
- The sermon ( Kutbah)
- Sharing greetings of peace (salam) with others
- Greeting every one with eid wishes
- Meeting relatives and hugging (Musabaha) each other with greetings
- Having nice meals
- Wearing new clothe
- Helping the poor to celebrate eid



And friends, August, also , is the month of exams! The scholarship exam and the Advance Level exam, both are held in August. So, let's pray for our brothers and sisters who sit the exams this time.

## Now for writing, let's try to write a paragraph on ' My family'

My family is a __________ (big/small) family.

We have ________ members in our family.


We __________ (love/hate) each other a lot

The eldest member of my family is my ________

All of us respect ______(him/her)

We pray from Allah, to keep us together even in Jennah

Now you can complete the essay , by adding more information in between.



### Joking !

Boy:My father's name is LAUGHING and my mother's name is SMILING.

Teacher:You must be kidding?

Boy:No.Thats my brother. I'm JOKING...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your corner

## THE FIVE PILLARS OF ISLAM

Entries by mail

1 TO BELIEVE IN ALLAH AND MUHAMMAD (SAL) IS THE MESENGR OF ALLAH ( KALIMAH)
2 PRAYER
3 ZAKATH
4 FASTING (RAMADAN)
5 HAJJ

NAME- AHAMED ASJAD IRSHAD
SCHOOL-INTERNATIONAL CHILD CARE CENTER(PUTTALAM)
CLASS M-GRADE 2

## Let's protect the Ozone layer

The Ozone layer is a layer in earth's atmosphere which contains relatively high concentrations of ozone (o3).This layer absorbs 93-99% of the sun's high frequency Ultraviolet light,which is potentially damaging to life on earth. Ozone layer is vitally important to life because it absorbs biologically harmful ultraviolet (UV) radiation emitted from sun which kills the survival on earth but the ozone layer is being destroyed, forming a big hole in it. That is commonly referred to as "The ozone hole" it particularly created over Antarctica where exists a special condition that accelerates the depletion of the ozone layer. If the hole grows larger we'll be affected like; an increase in the incidence of skin cancer, adverse impact on crops and animals, a large increase catara is a sun burning and suppression of immune systems in organisms etc. We have to protect the Ozone layer ;

1.Minimize high attitude aircraft flights.
2.Minimize rocket flights.
3.Encourage growth of plants that produce oxygen.
4.Decrease/control releases of high temperature steam.

**M.T. Nasreen.**
**Grade- 08A,**
**Mahmud Ladies College Kalmunai.**

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

## 10ம் தரம்

1. பின்வரும் சமயங்களில் மத்திய காலத்தில் சீனாவில் காணப்படாத சமயம்.
   i. கொன்பியூசியஸ் சமயம் ii. சமண சமயம்
   iii. தாவோவின் சமயம் iv. பௌத்த சமயம்

2. எந்த நாடு 1ம் விஜயபாகுவுக்கு கப்பல் நிறைய பொருட்களை அனுப்பியது?
   i. சீயம் ii. சீனா iii. பர்மா iv. கம்பூச்சியா

3. 'மன்சத்தார்' முறையை நடைமுறைப்படுத்திய மன்னன் யார்?
   i. சமுத்திர குப்தன் ii. சந்திர குப்தன்
   iii. அசோகன் iv. அக்பர்

4. டில்லி சுல்தானிய பேரரசில் இறுதியாக ஆட்சி செய்த அரச வம்சம்.
   i. லோதி ii. செய்யது iii. துக்ளக் iv. கல்ஜி

5. தன்னை 'அலெக்சாண்டரின் பிரதிபிம்பம்' என்று கூறிய மன்னன்.
   i. அலாவுதீன் கல்ஜி ii. முகம்மது பின் துக்ளக்
   iii. கஜனி முகம்மது iv. கோரி முகம்மது


6. சுவர்ண பூமி என்று குறிப்பிடப்பட்ட நாடு?
   i. தாய்லாந்து ii. ஆப்கானிஸ்தான்
   iii. பர்மா iv. வியட்னாம்

7. போரோ புதூர் விகாரை எங்கு காணப்படுகின்றது?
   i. சுமத்திரா ii. தாய்லாந்து iii. பர்மா iv. ஜாவா

8. மொகலாய ஆட்சியை ஏற்படுத்தியவன்.
   i. அக்பர் ii. பாபர் iii. ஔரங்கசிப் iv. துக்ளக்

9. 17 தடவைகள் இந்தியாவைத் தாக்கிய ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர் யார்?
   i. கோரி முகம்மது ii. பாபர்
   iii. துக்ளக் iv. கஜனி முகம்மது

10. அருகிலுள்ள படம் எந்த வணக்கஸ்தலத்தைக் காட்டுகின்றது?



   i. பர்மிய சாஞ்சி
   ii. 1ம் இலக்க சிவன் கோயில்
   iii. போதிமனை
   iv. 2ம் இலக்க சிவன் கோயில்

11. நிலத்தின் சாய்வை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட மிக உயர்ந்த தொழிநுட்பம்.
   i. ஜயகங்கை ii. கலிங்கற் தொட்டி
   iii. சுரங்க நீர்ப்பாசனம் iv. சுருங்கை

12. இராசரட்டையில் தலைநகரம் இருக்கும்போது, மாயாரட்டைக்குப் பொறுப்பான அரச பிரதிநிதி எவ்வாறு அழைக்கப்பட்டார்?
   i. மாபா ii. ஏபா iii. இளவரசன் iv. மகில

13. அனுராதபுர காலத்தில் நாடு நான்காகப் பிரிக்கப்பட்டது. அட்டவணை Aயில் 4 பிரதேசங்கள் உள்ளன. அதற்கு ஏற்ப அட்டவனை Bயை ஒழுங்குபடுத்தினால் சரியாக அமையும் விடை

| A | B |
|---|---|
| 1. உத்தரபஸ்ஸ | A தெற்கு |
| 2. தக்கிணபஸ்ஸ | B வடக்கு |
| 3. பாச்சின பஸ்ஸ | C மேற்கு |
| 4. பஸ்ஸிம பஸ்ஸ | D கிழக்கு |

   i. ABCD ii. BCDA iii. CDAB iv. BADC

14. நீர்வள நாகரிக காலத்தில் மதஹச என்ற பதம் எதைக் குறிக்கப் பயன்பட்டது?
   i. பெரும்போகம் ii. சிறுபோகம்
   iii. இடைப்போகம் iv. வீட்டுத் தோட்டம்

15. நீர்வள நாகரிக காலத்தில் உள்நாட்டில் காணப்பட்ட சந்தைகள் எப்பெயரால் அழைக்கப்பட்டன?
   i. கமுவ ii. நிகம iii. பதிய iv. நியம்கம

16. இலங்கையின் ஐந்தாவது தலைநகரம்
   i. தம்பதெனியா ii. கம்பளை
   iii. குருணாகல iv. யாப்பகூவ

17. மகிந்த தேரர் தேவ நம்பிய தீசனை சந்தித்த இடம்.
   i. ஜம்புகோளப் பட்டினம் ii. செங்கடகல
   iii. கோகர்ண iv. சேத்திய கிரி

18. சந்திர வட்டக்கல்லில் இடம்பெறாத ஒரு மிருகம்.
   i. சிங்கம் ii. புலி iii. யானை iv. குதிரை

19. 1ம் விஜயபாகு காலத்தில் வாழ்ந்த ஒருவர் கேள்விப்பட முடியாத ஒரு விடயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. பத்தகச்சனா வருகை

ii. மகா மேகவனம் வழங்கப்பட்டமை

iii. மாகனின் படையெடுப்பு

iv. ராஜராஜ சோழனின் படையெடுப்பு

20. 12 மகா கவிகள் எந்த மன்னன் காலத்தில் வாழ்ந்தார்கள்?

i. 1 ம் அக்போ ii. 2ம் அக்போ

iii. 2ம் புவனேகபாகு iv. மகா சேனன்

விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. ii | 6. iii | 11. i | 16. iii |
| 2. iii | 7. iv | 12. i | 17. iv |
| 3. iv | 8. ii | 13. iv | 18. ii |
| 4. i | 9. iv | 14. ii | 19. iii |
| 5. i | 10. iv | 15. iii | 20. i |

## வரலாறு - 11

01. பின்வரும் நாடுகளுள் பொதுவுடமை அணியைச் சேர்ந்த 3 நாடுகளைத் தெரிவுசெய்க.

சீனா, நோர்வே, கனடா, பிரேசில், வியட்னாம், வடகொரியா

02. பொது உடைமைப் புரட்சியின் வெற்றிக்கு பங்களித்த காரணிகள் 4 தருக.

03. ஐக்கிய அமெரிக்கா வல்லரசாக எழுச்சியடைந்தமைக்கான காரணிகள் இரண்டை விளக்குக.

04. கெடுபிடி யுத்த காலத்தில், மூன்றாம் உலகம் ஏற்படுவதைத் தடுக்க ஐக்கிய நாட்டவையம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றை விளக்குக.

விடைகள்

01. சீனா, வியட்னாம், வடகொரியா

02. i. சர்வாதிகார மன்னரால் துன்பங்களை அனுபவித்த மக்கள் ஒன்றுபட்டு போராடியமை.

ii. நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்கள் விடுபட விரும்பியமை.

iii. விவசாயிகளும் தொழிலாளர்களும் படையினரும் தமது பிரச்சினைகளிலிருந்து விடுபட விரும்பியமை.

iv. நிலப்பிரபுக்களின் கொடுமையான அதிகாரங்கள், மக்களை புரட்சிக்கு இட்டுச் சென்றமை.

### 03. நேட்டோ அமைப்பு ஏற்படுத்தப்பட்டமை

ஐக்கிய அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ நாடுகள் ஏற்படுத்திய பாதுகாப்பு அமைப்பே நேட்டோ அமைப்பாகும். வட அத்திலாந்திக் பாதுகாப்பு ஒப்பந்தம் என்பது நேட்டோவின் விரிவாக்கமாகும். 1949.04.04இல் கையொப்பமிடப்பட்ட வொஷிங்டன் ஒப்பந்தம் மூலம் நேட்டோ உருவானது. இந்த அமைப்பில் ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் முதலிய 16 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதன் தலைமை அலுவலகம் பிரான்சில் உள்ளது. நேட்டோ ஒப்பந்தத்தின் 5வது வாசகம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"அங்கத்துவ நாடுகளில் ஏதாவது ஒன்றின் மீது எதிர் நாடொன்று தாக்குதலை நடத்துமாயின் அதனை அனைத்து அங்கத்துவ நாடுகள் மீதும் நடத்தப்பட்டதாகக் கருதிச் செயல்படுவோம்."

### முதலாளித்துவ நாடுகளின் தலைமையை ஏற்றல்

இன்று உலகில் செல்வந்த நாடுகள் முதலாளித்துவ பொருளாதார முறையைப் பின்பற்றும் நாடுகளாகக் காணப்படுகின்றன. கனடா, இத்தாலி, ஜேர்மனி, ஸ்பானியா, போர்த்துக்கல், ஒல்லாந்து முதலிய நாடுகள் முதலாளித்துவ நாடுகளாக உள்ளன. இந்த நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஐக்கிய அமெரிக்கா வகிக்கின்றது. இதனால் ஐக்கிய அமெரிக்காவின் அந்தஸ்தும் செல்வாக்கும் அதிகரித்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் விருப்பங்களே ஐக்கிய நாட்டவையத்தின் தீர்மானங்களாக அமைகின்ற அளவுக்கு ஐக்கிய அமெரிக்காவின் செல்வாக்கு உயர்ந்துள்ளது. ஜனநாயக ஆட்சியின் வழிகாட்டியாக ஐக்கிய அமெரிக்காவே இருக்க வேண்டும் என்ற முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ் வெல்ட்டின் கூற்றுக்கிணங்க, ஐக்கிய அமெரிக்கா ஜனநாயக நாடுகளுக்குத் தலைமை வகிக்கின்றது.

**04. சுயெஸ் நெருக்கடி:** 1956இல் இஸ்ரேல்-அரபு யுத்தம் ஆரம்பமானது. "இஸ்ரேலுக்கு மேற்கு நாடுகள் உதவி செய்தால் நான் சுயெஸ் கால்வாயை தேசியமயமாக்குவேன்" என்று எகிப்து ஜனாதிபதி கமால் அப்துல் நாசர் கூறினார். மேற்கு நாடுகள் இஸ்ரேலுக்கு இராணுவ உதவிகளை வழங்கியமையினால் நாசர் சுயெஸ் கால்வாயை தேச உடமையாக்கினார். இஸ்ரேலுக்கு ஆதரவாக பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளும் எகிப்துக்கு ஆதரவாக சோவியத் ரஷ்யாவும் யுத்தம் செய்ய ஆயத்தமாகின. இது 3ம் உலக யுத்தமாக மாறாமல் இருக்க ஐக்கிய நாட்டவையம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அது சுயெஸ் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்ட U.N.E.F. (United Nations Emergency Force) என்ற படையை அனுப்பியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேர்ளின் பிரச்சினை:** 2ம் யுத்ததின் பின் ஜேர்மனி இரண்டாக பிரிந்தது. மே. ஜேர்மனி முதலாளித்துவ அணியிலும் கி. ஜேர்மனி பொதுவுடமை அணியிலும் இணைந்தன. மே. ஜேர்மனி நாணய சீர்திருத்தத்தை மேற்கொண்டதால் 1948.06.23இல் மே. ஜேர்மனிக்குள் பிரவேசிக்கும் அனைத்து மார்க்கங்களையும் ரஷ்ய அதிபர் ஸ்டாலின் மூடினார். இதனால் இரு அணிகளுக்குமிடையில் யுத்தம் தோன்றும் நிலை தோன்றியது. ஒரு வருடம் நீடித்த இப்பிரச்சினை ஐக்கிய நாட்டவையத்தின் கடுமையான முயற்சியின் காரணமாக 1945.05.04இல் தீர்த்து வைக்கப்பட்டது.

**கொரியப் பிரச்சினை:** 1947இல் கொரியப் பிரச்சினை தீவிரமடைந்தது. இப்பிரச்சினை முதலாளித்துவ நாடுகளுக்கும் பொதுவுடமை நாடுகளுக்குமிடையில் யுத்தம் ஏற்படும் நிலையைத் தோற்றுவித்தது. 1947இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் இரண்டாவது கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்டது. "கொரியாவிலிருந்து அனைத்து வெளிநாட்டுப் படைகளும் வெளியேற வேண்டும்" என்று 1947.11.14இல் நிறைவேறிய பொதுச்சபைத் தீர்மானம் கூறுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சியினால் அங்கு சமாதானம் ஏற்படுத்தப்பட்டது. 1948இல் கொரியா வட கொரியா, தென் கொரியா என 2 நாடுகளாகப் பிரிக்கப்பட்டது.

---

# ஒரு நபித் தோழரின் வாழ்வில் தாய்

**அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு)** அவர்கள் இஸ்லாத்தை நன்கு விளங்கி ஏற்றுக் கொண்டவர். தான் பெற்ற சத்தியத்தின் விளக்கத்தை மற்றோரும் பெற வேண்டும். குறிப்பாக, தன் தாய் பெற வேண்டும் என்பது அவரது தணியாத ஆவல். அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் பல, பிரார்த்தனைகள் பல!

எனினும் அவரது அன்னையோ எதையும் ஏற்க மறுத்து விட்டார். அதற்காக அவரும் தனது முயற்சியைக் கைவிடவில்லை.

ஒரு முறை அவர் தனது தாய்க்கு இஸ்லாத்தை விளக்கிக் கூறிக் கொண்டிருந்த பொழுது, கோபமுற்ற அவரது தாயார் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நிந்திக்க ஆரம்பித்து விட்டார். அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இதனால் பெரிதும் வேதனையுற்றார். நபிகளாரை சந்தித்து விவரங்களைக் கூறி, தன் தாய்க்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரியுமாறு வேண்டி நின்றார்.

"யா அல்லாஹ்! அபூ ஹுரைராவின் அன்னைக்கு நேரான வழியைக் காட்டியருள்வாயாக" என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிரார்த்தனை புரிந்தார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பிரார்த்தனை அல்லாஹ்விடம் ஏற்கப்படும் என்பதை அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் திடமாக நம்பினார்கள். அந்த உறுதியான நம்பிக்கையுடன் அவர் தன் வீடு நோக்கி நடந்தார்.

வீடு பூட்டிக் கிடந்தது!

அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் காலடிச் சப்தத்தைக் கேட்ட அவரது தாயார், தான் குளித்துக் கொண்டிருப்பதாகவும், சற்று நேரம் வெளியே தாமதிக்கும்படியும் கூறினார்.

சற்று நேரத்தில் வீட்டின் கதவு திறந்து கொண்டது. அதோடு, தன் தாயின் உளக் கதவும் இஸ்லாத்திற்காக திறக்கப்பட்டிருப்பதைக் கண்ட அவர் இன்புற்றார்; இறைவனுக்கு நன்றி செலுத்தினார். அந்த அம்மையார் தூய கலிமாவை மொழிந்து இஸ்லாத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அந்த நல்ல செய்தியை ஓடோடிச் சென்று அல்லாஹ்வின் தூதரிடம் கூற வேண்டும் என ஆவல் கொண்டார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் அது பற்றிக் கூறிய பொழுது அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள்.

அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மற்றவர்களின் அன்னையருக்கும் அடிக்கடி பிரார்த்தனை புரிபவர்களாக இருந்தார்கள்.

நேர்வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்கள் மீது அல்லாஹ்வின் பேரருள் பொழியுமாக!

பீ.எம். நஜாஹ், தரம் 9
சிறாஜ் அரபுக் கல்லூரி, ஓட்டமாவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணவர்களும் நேரமுகாமைத்துவமும்


ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

சர்வ உலகையும் படைத்துப் பரிபாலிக்கின்ற ஏக இரட்சகன் அல்லாஹ்வையும் அவனது இறுதித் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களையும் ஈமான் (நம்பிக்கை) கொண்டு அதன் பிரகாரம் வாழ்வதனூடாக நாம் முஃமின்கள் என அழைக்கப்படுகிறோம். ஒரு முஃமின் பல ஆளுமைப் பண்புகளைக் கொண்டவனாகக் காணப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறான். இமாம் ஹஸனுல் பன்னா அவர்கள் ஒரு முஃமின் கொண்டிருக்க வேண்டிய பத்து ஆளுமைப் பண்புகளை வரையறுத்துக் குறிப்பிடுகின்றார்கள். அத்தகைய பண்புகள் வருமாறு:

1. சரியான, சீரான அகீதாவை (இஸ்லாமியக் கொள்கையை)க் கொண்டவராக இருப்பார்.
2. இபாதத்தில் (வணக்க வழிபாடுகளில்) சரியானவராக, சீரானவராக இருப்பார்.
3. பண்பாட்டில் பலமானவராக இருப்பார்.
4. சிந்தனைத் தெளிவுள்ளவர்.
5. உழைக்கும் திறனுள்ளவர்.
6. உடல் பலமிக்கவர்.
7. தனது அனைத்து விவகாரங்களையும் ஒழுங்காக மேற்கொள்பவர்.
8. நேரத்தைப் பேணுபவர்.
9. தன் உள்ளத்துடன் போராடுபவர்.
10. பிறருக்குப் பயனுள்ளவர்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 10 ஆளுமைப் பண்புகளையும் ஒரு முஃமின் கொண்டிருப்பது இன்றியமையாததாகும். அந்த வகையில் இவ் ஆளுமைப் பண்புகள் பற்றி அறிந்திருப்பதும் அவசியமாகும். அதிலும், நேரம் தான் வாழ்க்கை என்ற கூற்றுக்கிணங்க நேரத்தைப் பேணுவது தொடர்பில் சற்று விரிவாக அறிந்திருப்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும். குறிப்பாக இளமைப் பருவத்தில் இருக்கின்ற மாணவர்கள் இதன் முக்கியத்துவத்தை அறிந்து தமது வாழ்வில் செயற்படுத்துவது சிறந்த எதிர்காலத்திற்கான பாரியதொரு முதலீடாக அமையும் என்பதில் ஐயமில்லை.

பாடசாலை, மாலை நேர வகுப்புக்கள், சுய கற்றல், வீட்டு வேலை, ஒப்படை செய்தல், விளையாட்டு, குடும்ப உறவினர்களைத் தரிசித்தல், பொழுதுபோக்கு, மேலதிக வாசிப்பு என பல வேலைகளுக்கு மத்தியில் நேரத்தை எவ்வாறு ஒழுங்கமைப்பது, எவ்வாறு பிரயோசனமாகக் கழிப்பது, பல வேலைகளையும் உள்ளடக்கியதாக நேர சூசி ஒன்றை எவ்வாறு தயாரித்துக் கொள்வது என்ற பல கேள்விகளுக்கு விடை காண முடியாமல் மாணவர்கள் அங்கலாய்க்கின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. இவ்வினாக்களுக்கு விடை காண மாணவர்களுக்கு ஒத்துழைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.




## நேரத்தின் முக்கியத்துவம் பற்றி அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னா

நேரத்தின் முக்கியத்துவம், அதைப் பேணுவதன் அவசியம் பற்றி அல்குர்ஆனும் நபிமொழிகளும் பல இடங்களில் பேசுகின்றன.

அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனின் பல இடங்களில் காலத்தின் பல்வேறு பகுதிகளிலும் சத்தியம் செய்கின்றமை நேரம் எவ்வளவு முக்கியம் என்பதைச் சுட்டிக்காட்டுகின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றது. உதாரணமாக :

"காலத்தின் மீது சத்திய மாக" (103: 1)

"விடியற்காலையின் மீது சத்தியமாக" (89: 1)

"முற்பகல் மீது சத்தியமாக" (93: 1)

"(இருளால்) தன்னை மூடிக் கொள்ளும் இரவின் மீது சத்தியமாக" (92: 1)

"பிரகாசம் வெளிப்படும் பகலின் மீது சத்தியமாக" (92: 2)

போன்ற அல்குர்ஆன் வசனங்களைக் குறிப்பிடலாம்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய ஹதீஸ்களும் காலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசுகின்றன.

நான்கு விடயங்கள் பற்றி அவன் விசாரிக்கப்படும் வரை ஓர் அடியானின் பாதங்கள் மறுமை நாளில் அசையாது.

1. அவனது வாழ் நாள் பற்றி. அதனை அவன் எவ்வாறு கழித்தான்?
2. அவனது வாலிபம் பற்றி. அதனை அவன் எவ்வாறு கழித்தான்?
3. அவனது செல்வம் பற்றி. அதனை அவன் எங்கிருந்து சம்பாதித்தான்; அதனை அவன் எவ்வாறு செலவழித்தான்?
4. அவனது அறிவு பற்றி. அதைக் கொண்டு அவன் என்ன செய்தான்?

அறிவிப்பவர்: முஆத் இப்னு ஜபல் (ரழியல்லாஹு அன்ஹு) நூல்: அல் - முஃஜம் அல் - கபீர்

இந்த ஹதீஸின் ஆரம்பத்தில் வரக்கூடிய இரு அம்சங்களும் காலத்துடன் நேரடியாகத் தொடர்புபடுவதைக் காணலாம். அந்த வகையில் நேரத்தை வீணடிப்பது பற்றி மறுமையில் விசாரிக்கப்படும் என்பதை இந்த ஹதீஸ் சுட்டிக்காட்டுகிறது.

இவை தவிர நேரத்தின் முக்கியத்துவம் மற்றும் அதைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பில் இன்று அதிகமாகப் பேசப்படுவதைக் காணலாம். நேர முகாமைத்துவம் சீர்குலையும்போது வாழ்க்கையின் ஏனைய அம்சங்களும் சீர்குலைந்துவிடும் என்பது கண்கூடு.

### நேர முகாமைத்துவம் என்றால் என்ன?

நேர முகாமைத்துவத்திற்கு பல விளக்கங்கள் சொல்லப்படினும் இலகுவாக விளங்கிக் கொள்ள பின்வருமாறு குறிப்பிடலாம்: "இருக்கின்ற வேலைகளை வெற்றிகரமாக முடிப்பதற்குக் கிடைக்கின்ற நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதை நேர முகாமைத்துவம்" என்று குறிப்பிடலாம்.

வேறு வார்த்தையில் சொல்வதாயின், "நேர முகாமைத்துவம் என்பது குறித்த வேலைகளைச் செய்து முடிக்க, குறிப்பிட்ட நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்துகின்ற ஒரு செயன்முறையாகும். விஷேடமாக, வினைத்திறன் மற்றும் விளைதிறன்களைக் கூட்டிக் கொள்வதை இலக்காகக் கொண்டமைந்த ஒரு நடவடிக்கையாகும்."

குறித்த ஓர் இலக்கை, செயற்திட்டத்தை குறிப்பிட்ட காலத்தினுள் பூர்த்தி செய்வதற்கு நேரமுகாமைத்துவம் இன்றியமையாதது. இதற்குத் திறன்கள், கருவிகள், தொழிநுட்ப முறைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### மாணவர்களும் நேரமுகாமைத்துவத்தின் முக்கியத்துவமும்

இன்று மாணவர்கள் நேரமில்லை அல்லது நேரம் போதாது என்கின்றனர் சதாவும் அலகுப் பரீட்சைகள், தவணைப் பரீட்சைகள், ஒப்படைகள், பாடப் புறச் செயற்பாடுகள், பிரத்தியேக வகுப்புக்கள் என கற்றலோடு தொடர்பான நிகழ்ச்சி நிரல்கள். இவை தவிர விளையாட்டு, குடும்ப உறவினர்களைத் தரிசித்தல், வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதோடு மார்க்க விவகாரங்களில் பங்களிப்புச் செய்தல் மற்றும் இன்னும் பல தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களும் மாணவர்கள் முன் காணப்படுகின்றன. சில மாணவர்களுக்கு ஊர் சுற்றுதல், சினிமா, காதல், போதைப் பொருள் பாவணை, நண்பர்களுடன் வெட்டியாகச் சுற்றுதல் போன்ற இவையல்லாத பல நிகழ்ச்சி நிரல்களும் காணப்படுகின்றமை கவலையான விடயமாகும்.

தனது எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கும் மாணவர்கள், இத்தகைய சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது, தமது எதிர்காலத்துக்குப் பொருத்தமான செயற்பாடுகளை தெரிவு செய்து அவற்றைக் கச்சிதமாக நிறைவேற்றுவதற்கு நேரத்தை எவ்வாறு ஒழுங்குபடுத்தி பிரயோசனமாகப் பயன்படுத்துவது என்ற அங்கலாய்ப்பு இல்லாமலில்லை.

தொடரும்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# World Today



**திரு. பீ. உமா சங்கர்,**
B.Com (Jaf), M.Com (Kelaniya) (R) Spl.Trd.Com,
NDBF, Sri Lanka Technical College - Colombo


## திஸர பெரேராவின் ஹெட்ரிக் சாதனை




இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரான திஸர பெரேராவினால் 2012 ஜூனில் இலங்கையில் நடைபெற்ற இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கெதிரான ஒரு நாள் போட்டியில் ஹெட்ரிக் சாதனை நிகழ்த்தப்பட்டது. இது சர்வதேச ஒரு நாள் போட்டியில் நிகழ்த்தப்பட்ட 32வது ஹெட்ரிக் ஆகும். இவ்வாறான ஹெட்ரிக் சாதனை நிகழ்த்திய நான்காவது இலங்கை வீரர் இவராவார். மேலும், ஹெட்ரிக் சாதனை படைத்த இலங்கை வீரர்கள்,

| வீரர் | தடவைகள் | சாதனை நிகழ்த்திய நாடு ஆண்டு |
|---|---|---|
| லஸித் மாலிங்க | 3 | தென்னாபிரிக்கா (2007), கென்யா (2011), அவுஸ்திரேலியா (2011) |
| சமிந்த வாஸ் | 2 | சிம்பாவே (2011), பங்களாதேஷ் (2003) |
| மஹ்ரூப் | 1 | இந்தியா (2010) |

## உலகில் நீளமான கேபிள் பாலம்



ரஷ்யாவில் விலாடிவோஸ்பாக் நகரையும் ருஸ்கி தீவையும் இணைக்கும் வகையில் கட்டப்பட்ட இப்பாலமே உலகின் மிக நீளமான கேபிள் பாலமாகக் கருதப்படுகின்றது. இது 1104 மீற்றர் 3622 அடி நீளம் கொண்டதாகும். இதற்கு முன் சீனாவில் யாஸ்ட் ஹூ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலமே நீளமான பாலமாக கருதப்பட்டது.

## எகிப்திய ஜனாதிபதித் தேர்தல்



2012 ஜூனில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பிரகாரம் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியாக முஹம்மத் முர்ஸி விளங்குகின்றார். இத் தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவக் கட்சியின் சார்பாக முர்ஸியும் ஹுஸ்னி முபாரக் அரசாங்கத்தில் பிரதமராக இருந்த அஹமட் ஷபீக்கும் போட்டியிட்டனர். இதில் முர்ஸி 51.8 வீத (13.2 மில்லியன்) வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அஹமட் ஷபீக் 48.1 வீத (12.3 மில் லியன்) வாக்குகள் பெற்று இரண்டாம் நிலையடைந்தார்.

## இலங்கையின் புதிய சட்டமா அதிபர்



இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் இருபத்தோராவது சட்ட மாஅதிபராக ஜனாதிபதி வழக்கறிஞர் பாலித பெர்ணான் 2012 ஜூலையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## ஆபிரிக்க ஒன்றியத்தின் முதலாவது பெண் தலைவர்



ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைவராக தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நாகொசஸனா தலாமினி ஸூமா 2012 ஜூலையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் மேற்படி பதவி நிலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்பட்ட முதல் பெண் என்ற பெயரை அவர் பெறுகிறார்.

இவர் ஆபிரிக்க ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் 54 நாடுகளில் 37 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்டவர் ஆபிரிக்க ஒன்றியத் தலைவராகப் பதவி வகித்த காபொனைச் ஜீன் பிங் ஆவார். இப் புதிய தலைவர் தென் ஆபிரிக்காவில் மிக நீண்ட காலம் சேவையாற்றிய அமைச்சராக விளங்குவதுடன் அவர் தற்போது தென் ஆபிரிக்காவின் உள்துறை அமைச்சராகவும் விளங்குகிறார்.

### 15வது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டி

15வது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகள் ஜூன் மாதம் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றன. இதில் இவ்வருடம் கூடுதலாக 38 நாடுகள் பங்குபற்றியதுடன் 44 போட்டிகளுக்காக 317 ஆண் போட்டியாளர்களும் 198 பெண் போட்டியாளர்களுமாக 515 பேர் பங்குபற்றியிருந்தனர்.

1986ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் ஆரம்பமான இப் போட்டிகள் இம்முறையே முதன் முதலாக இலங்கையில் நடைபெற்றன. இப் போட்டிகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுவது வழமையாகும். இப் போட்டிகளில் சீனா 15 தங்கம், 05 வெள்ளி, 03 வெண்கலம் என மொத்தம் 23 பதக்கங்களை பெற்று முதலிடத்தை யும் இலங்கை 02 தங்கம், 02 வெள்ளி, 02 வென் கலம் உட்பட 06 பதக்கங்களை பெற்று ஏழாமிடத்தையும் அடைந்தன.

#### இலங்கை சார்பாக பதக்கம் பெற்றோர்

| இல | வீரர்/ வீராங்கனையின் பெயர் | போட்டி | பதக்கம் | சாதனை |
|---|---|---|---|---|
| 01 | சிவந்தி ரத்நாயக்க (இல.மெய். குழு தலைவர்) | 400 m (பெண்கள்) | தங்கம் | 55.91 செக்கன் |
| 02 | துலாஜ் மதுசங்க | 400 m (ஆண்கள்) | தங்கம் | 43.37 செக்கன் |
| 03 | மதுஷானி நிமேஷா சிறிவர்த்தன | உயரம் பாய்தல் (பெண்கள்) | வெள்ளி | 1.79 மீற்றர் |
| 04 | கபோதி காஞ்சனா, பி. ஹன்சினி | 4X400 m (பெண்கள்) | வெள்ளி | குமாரி ரத்நாயக்க, நதீஷானி, ஹெந்திரசன் |
| 05 | சாமிகா ஜயமினி | 300 m (பெண்கள்) | வெண்கலம் | 46.76 செக்கன் |
| 06 | சுபுன் விராஜ் ரன்தெனிய | 110 m தடை தாண்டல் (ஆண்கள்) | வெண்கலம் | 13.84 செக்கன் |

#### ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெற்ற வருடங்கள், நாடுகள், பதக்கங்கள்

| வருடம் | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1986 | இந்தோனேசியா | | | | |
| 1988 | சிங்கப்பூர் | 01 | 01 | | |
| 1990 | சீனா | | | | |
| 1992 | இந்தியா | | | | |
| 1994 | இந்தோனேசியா | 02 | 02 | | 04 |
| 1996 | இந்தியா | | | | |
| 1997 | தாய்லாந்து | | | | |
| 1999 | சிங்கப்பூர் | | | | |
| 2001 | புரூனை | 01 | 01 | | |
| 2002 | தாய்லாந்து | 01 | 01 | | |
| 2004 | மலேசியா | 01 | 01 | | |
| 2006 | மக்கோ | | | | |
| 2008 | இந்தோனேசியா | 01 | 01 | | 02 |
| 2010 | வியட்நாம் | 01 | 01 | | |
| 2012 | இலங்கை | 02 | 02 | 02 | 06 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பார்வைகள்' சிறுகதை

வினா ▶ 01. "பார்வைகள்" எனும் சிறுகதையை எழுதியவர் யார்?

விடை ▶ ஆசிரியர் 'நந்தி'

வினா ▶ 02. இவரது இயற்பெயர் என்ன?

விடை ▶ பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்

வினா ▶ 03. "பார்வைகள்" எனும் சிறுகதை எதைப் பற்றிய கதையாகும்? (மையக் கருத்து)

விடை ▶ சமூகத்தின் தனி மனித பிரச்சினைகள் மற்றும் ஒரு தனிமனிதனின் ஆளுமை வேறுபட்ட தளங்களில் மாறுபடுவது பற்றியான சித்திரிப்பாக இச் சிறுகதை திகழ்கின்றது.

வினா ▶ 04. "பார்வைகள்" என்று இக்கதைக்கு ஆசிரியர் தலைப்பிட்டதன் பொருத்தப்பாட்டுக்குரிய சான்றுகளை முன்வைக்குக.

விடை ▶ ❑ **தொழிலால் தகுதி வேறுபடல்**

"ஆஸ்பத்திரித் தோட்டத்தில் வேலையுடன் பெரிய டொக்டர் வீட்டில் அவர் செய்யும் தொட்டாட்டு வேலைகள்..."

நல்ல பண்புகளை தன்னகம் கொண்ட தர்மலிங்கம் ஆஸ்பத்திரி தோட்டத்தையும் வளவையும் பராமரிப்பதுடன், டாக்டர் வீட்டிலும் வேலை செய்து கொடுக்கிறான். டாக்டர் அரச ஊழியர், தருமலிங்கமும் அரச ஊழியர். ஆனால், சமூகப் பார்வை உயர்ந்த தொழில், தாழ்ந்த தொழில் என்று அமைவதை சுட்டுவதாக அமைதல்.

❑ **தொழில் பற்றிய மனப் பதிவு**

"தனது மகன் ஒரு அலுவலகத்தின் பாதுகாப்பிலே நாற்காலியில் உட்கார்ந்து பேனா பிடித்து..."

தங்கம்மாவின் தொழில் பற்றிய பார்வை மகனின் தொழில் பற்றிய கனவாக மலர்வதை ஆசிரியர் புலப்படுத்தி நிற்கின்ற விதம் தலைப்பின் பொருத்தத்துக்குரிய சான்றாகும்.

❑ **பட்டணம் பற்றிய பார்வை**

"அப்பா எங்கே வேலை செய்கிறார் என்று பெரிய பாடசாலை டீச்சர் கேட்டால், 'பட்டணத்து ஆஸ்பத்திரியில்' என்று சொல்ல வேண்டும்..."

என்றவாறு தாய் சொல்லுதல் 'லேபரர்' என்று கூறும்படி கூறல் பட்டணத்தில் கற்க சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் மென்ற ஆசை, எதிர்பார்ப்பு, என்ற பார்வைகளை புலப்படுத்துகிறார்.

❑ **தொழில் நிலையங்களின் அந்தஸ்து**

"பொய் பேசாதே லிங்கம்..."

"மடையன்..."

தருமலிங்கம் போன்ற பதவி நிலையில் குறைந்தவர்கள் டாக்டர் போன்ற உயர் அதிகாரிகளினால் நடாத்தபப்படும் விதம் குறித்த பார்வை, தரக்குறைவாக ஏசுதல் அவமதித்தல் ஏழைத் தொழிலாளிகளின் மனம் வாடும் சந்தர்ப்பங்களின் பக்கம் இக்கதையின் பார்வை நகர்வதும் கதைத் தலைப்பின் பொருத்தத்துக்கு தக்க சான்றாகும்.

❑ **தொழிலாளி தொழிலாளியாகவே இருக்க வேண்டும் என்ற சமூகப் பார்வை**

"எனது மகனை சேர்ப்பதற்கு வந்தனான், அம்மா..." அம்மா முகத்தில் துர்நாற்ற வாயுவைப் பீச்சியது போல் அலங்கோல மாற்றத்தை உண்டுபண்ணியது...

தொழிலாளியின் பிள்ளை உயர் பதவி வகிக்கக் கூடாது. பட்டணத்து பாடசாலைகளில் உயர் அதிகாரிகளின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் படிக்கும்போது அவர்களுடன் சரிசமமாக கற்க தகுதியற்றவர்கள் எனும் சமூகப் பார்வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இக்கதையின் ஒவ்வொரு சம்பவமும் உயர்ந்த தொழில், தாழ்ந்த தொழில் என்ற தொழில் வேறுபாடு, தொழில் நிறுவனங்களில் தாழ்ந்த தொழில் செய்வோர் நடத்தப்படும் விதம், சமூகத் தடை மீறி உயர் தொழில் செய்ய கனவு காணும் சமூகம், தொழில் அந்தஸ்து பெறத் துடிக்கும் உள்ளங்கள் என பல கோணங்களில் இக்கதை பார்வை செலுத்தியிருப்பது தலைப்புக்கு அணி சேர்க்கிறது எனலாம்.

வினா ▶ *05. 'ஒரு தனிமனித ஆளுமை தளத்திற்கேற்ப மாறுபடுதல்' என்ற சமூக நிலைப்பாடு தருமலிங்கம் எனும் பாத்திரத்தினூடாகப் புலப்படுத்தப்படுமாற்றை துலக்குக.*

விடை ▶ 'பார்வைகள்' எனும் சிறுகதையில் தனிமனித ஆளுமைகள் தளத்திற்கேற்ப மாறுபடுதல் பல கோணங்களிலும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, தருமலிங்கம் எனும் தனிமனிதனின் ஆளுமை தளத்துக்கேற்ப மாறுபடுதலை மிகவும் துல்லியமாக நகர்த்தி செல்வது நெஞ்சைத் தொடுகிறது.

தருமலிங்கத்தின் மனைவிக்கு கணவனின் நட்பு, ஊர்மதிப்பு என்பவற்றை நினைத்து உள்ளுக்குள் பெருமிதம் என்றவாறு ஆசிரியர் காட்டுகிறார். அத்துடன் "யாரப்பா பெரியவர், அப்பா பெரிசு" என்ற மகன் தந்தை உரையாடலிலும் தர்மலிங்கம் ஊரில் தான் வாழும் சூழலில் தனக்கென தனியிடம் வைத்துள்ளமை புலனாகிறது.

"தம்பி லிங்கம், வாற திங்கள் கோயிலிலே சங்காபிஷேகம் மறந்திடாதேயும்" என்ற வேண்டுகோளினை எடுத்து நோக்கின், தர்மலிங்கம் எனும் தனிமனிதனின் சமூகப் பணிகள், சமயப் பணிகளும் ஈடுபாடும் சமய நிகழ்வில் அவனது தேவையின் பிறரது எதிர்பார்ப்பு போன்றன புலப்படுகின்றன.

மேலும், வேலைத்தளத்தில் தோட்டத் தொழிலாளியாக தனது பணியை செவ்வனே செய்வது போன்று பெரிய அதிகாரிகளுடனான பணிவான உறவை "மன்னிக்க வேண்டும் ஐயா, எனக்கு ஒரு நாள் அவரச லீவு வேண்டும்" என்று கேட்பது புலப்படுத்தும் அதேவேளை, பெரிய அதிகாரி வீட்டில் வேலை பார்த்துக் கொடுத்தல் சம்பள மற்ற வேலையென மனைவி கடிந்தபோது, மற்றவர்களுடனான உறவு இனிமை, மகிழ்வைத் தருவது பெரிது என கூறலும் தருமலிங்கம் என்ற பாத்திரத்தின் தளத்திற்கேற்ற குணப்பண்புகளை சித்திரிக்கின்றன.

உயர் அதிகாரி "பொய் பேசாதே, ...மடையன்" போன்ற சொற்பிரயோகத்தில் கடிந்தபோது பொறுமையாக இருப்பதாக ஆசிரியர் புலப்படுத்தி நிற்கிறார். அத்துடன் சந்தர்ப்பம் வரும்போது நீதி, நியாயம், ஏற்றத்தாழ்வு தொடர்பாக பேசும்துணிச்சலுடையவராகவும் தருமலிங்கம் காட்டப்படுதலும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக சிறந்த குடும்பத் தலைவராக, குழந்தை உளவியல் தெரிந்தவராக, சிறந்த தொழிலாளியாக, சமூகத் தொண்டராக, மதப்பற்றும் பொறுமையும் பணிவும் கொண்டவராக, மற்றவர்களை மதிக்கும் தன்மையுடையவர்களாக, நியாயத்துக்காக குரல் கொடுப்பவராக, தருமலிங்கம் என்ற பாத்திரம் சமூகத்தின் ஒவ்வொரு தளத்திலும் தன்னுடைய ஆளுமையை புலப்படுத்தி நிற்பதை ஆசிரியர் அழகுற அமைத்திருக்கிறார்.

வினா ▶ *06. இக்கதையில் இடம்பெறும் முக்கிய பாத்திரங்கள் எவை?*

விடை ▶ *1. தருமலிங்கம்*
*2. தருமலிங்கத்தின் மனைவி*
*3. மகன் விமலன்*
*4. வைத்திய அதிகாரி*

## கட்டம் கட்டமாக.... 30ஆம் பக்க தொடர்

திட்டமிடல் என்பது ஒரு நிகழ்வல்ல. அது நிகழ்வுகளின் தொடர் சங்கிலியே. ஆரம்பம் முதல் இறுதி இலக்கை அடைவதற்கான கடைசி நிகழ்வு வரை அவை ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த நிகழ்வுகளின் தொகுதி ஆகும். இது பல்வேறு முறைகள், நுணுக்கங்களைக் கையாண்டு ஒழுங்கு முறையாக நடைபெறும் நிகழ்வுகளாகும். இதே ஒழுங்குதான் மனிதனின் வாழ்க்கையிலும் செயற்படுகிறது. படிப்படியாக மது தடைசெய்யப்பட்ட நிகழ்வையும் இதற்கு உதாரணம் கூறலாம்.

எனவே, மாணவர்களாகிய நீங்கள் உங்கள் கல்வி வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் இத்தகைய கட்டம் கட்டமான நகர்வுகளை முன்னெடுத்து வெற்றிப் பாதையில் பயணிக்க வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம்.வை.எப். சியாமா**
**மாவனல்லை**

# கல்வியில் முன்னேற இலட்சியம்

**"இன்பங்களை அடைய முயல்வதை விட இலட்சியங்களை அடைய முயல்வதே நலம்"**

என்பது ஒரு முதுமொழியாகும். அந்த வகையில் இலட்சியம் என்றால் என்ன? அது எத்தகையது? அதன் விளைவுகள் என்ன? ஆகிய வினாக்களுக்கு கல்வி கற்கும் மாணவர்கள் சரியான விடையை தெளிவாக விளங்கியிருப்பது அவசியமாகும். நாம் எந்தக் காரியத்தை செய்வதானாலும் அதற்கு ஒரு நோக்கமும் இலக்கும் இருக்க வேண்டும். அதிலும் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலட்சியம் என்பது அத்தியவசியமானதாகும். அதாவது நாம் ஏன் கற்கின்றோம்? எதற்காகக் கற்கின்றோம்? இறுதியில் எந்த நிலையை அடையப் போகிறோம்? என்று நாம் சிந்திக்க வேண்டும்.

இலட்சியம் இல்லாத கல்வி உப்பில்லாப் பண்டத்தைப் போன்றதாகும். இன்றைய சமூகத்தில் அனைவரும் அறிவை விருத்தி செய்வதற்காக என்று கல்வி கற்கிறார்கள். ஆனால், இடைநடுவே பல காரணங்களால் பாடசாலைக் கல்வியை விட்டு விடுபவர்களும் உள்ளனர். என்றாலும் எனது அன்பான தம்பி தங்கைகளுக்கு நான் இவ்விடத்தில் கூற விரும்புவது, நீங்கள் கல்வியில் உயர்ந்த இடத்திற்குச் செல்ல வேண்டும். அதனால் இளம் பருவத்திலேயே ஓர் இலட்சியத்தை உங்கள் மனதில் ஆழமாகப் பதித்துக் கொள்ளுங்கள்.

இலட்சியம் அற்ற வாழ்க்கையும் கல்வியும் படகோட்டி இல்லாத படகைப் போன்றதாகும். இன்றைய சூழலில் கல்வி அறிவற்றவர்கள் கண்கள் இல்லாதவர்களைப் போன்றவர்கள்.

அன்பான சகோதர சகோதரிகளே, இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். எதிர்கால உலகை ஆளப்போகும் தலைவர்கள். எதிர்காலம் பல வகையான மாற்றங்களுடன் வித்தியாசமான முறையில் எம்மை நோக்கி வரும். எனவே, நாம் கல்வி அறிவு படைத்தவர்களாக இருந்தால் மட்டுமே எதிர்காலத்தை துணிவுடன் சந்திக்கலாம்.

மிருகங்களும் மனிதனைப் போலவே பிறக்கின்றன, இறக்கின்றன, உண்ணுகின்றன, உறங்குகின்றன. ஆனால், மனிதன் மிருகங்களில் இருந்து வேறுபடுவது பயனுள்ள கல்வி அறிவின் மூலமாகவே ஆகும். கல்வி எம்மை உயர்ந்த இடத்துக்கு கொண்டு செல்லும். நாம் பெற்றுள்ள அனைத்து வகையான செல்வங்களும் காலத்தின் கோலத்தால் மாயையாக அழிந்து விடலாம். பணம், பொருள், சொத்து என்பவை இயற்கை அனர்த்தங்களாலோ, திருடர்களாலோ சூழ்ச்சிகளாலோ என்றோ எம்மை விட்டு இல்லாமல் செல்லலாம். ஆனால், நாம் பெற்ற கல்வி அறிவை எவராலும் எம்மில் இருந்து களவாட முடியாது.

உதாரணமாக, கடந்த காலங்களில் எமது நாட்டில் ஏற்பட்ட யுத்தம், சுனாமி அனர்த்தம் போன்றவற்றால் தமது சொத்துக்களை இழந்த பல பேர் அகதிகளாக வந்து பின்னர் படிப்படியாக முன்னேற்றம் அடைந்தது தாம் கற்றிருந்த கல்வியின் மூலமாகவே என்பதை நாம் அனைவரும் அறிவோம். எனவே, கல்வி என்பது மனிதனை அழிக்கும் ஒரு விடயமல்ல. மனிதனை மனிதனாக மாற்றும் ஆயுதமாகும்.

இலக்கு எனும்போது எம்மால் அடைய முடியாத இலக்குகளை இலட்சியங்களாக்கிக் கொள்ளக் கூடாது. எமது இலட்சியம் அடையக்கூடிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாக இருக்க வேண்டும். சாத்தியமானதாக அமைய வேண்டும்.

அடுத்து எம்முள் இருக்கும் திறமை என்ன என்பதை நாமே விளங்கிக் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில்தான் எமது இலட்சியம் அமைய வேண்டும். அதாவது, நாம் ஒன்றை அடைய ஆசைப்படுவோம். ஆனால், இயற்கை யாகவே எம்மில் அந்தத் திறமை இல்லாமல் இருக்கலாம். அதனால் என்னால் இது முடிய வில்லையே என்று கவலைப்படக் கூடாது. எனவே, சாத்தியமான இலக்குகளையே தமது இலட்சியமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரு வகுப்பில் இருக்கும் அனைத்து மாணவர்களும் வைத்தியராக முடியாது. அவர்கள் அனைவரும் ஆசிரியர்க ளாக முடியாது. அனைவரும் சட்டத்தரணி களாக முடியாது. மாறாக ஒவ்வொரு மாண வரிடமும் பல்வேறுபட்ட திறமைகள் மறைந்து காணப்படுகின்றன. அவற்றை அறிந்து பெற் றோரும் தம் பிள்ளைகளுக்கு உரிய வகையில் வழிகாட்ட வேண்டும்.

உங்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு திறமை இருக்கலாம். சிலருக்கு பேச்சாற்றல், சிலருக்கு எழுத்தாற்றல் சிலருக்கு கற்பனை ஆற்றல் என்று அவை நீண்டு செல்கின்றன. அந்த வகையில் உங்களுக்கு பொருத்தமான ஓர் இலட் சியத்தை இப்போதே உங்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதித்துக் கொள்ளுங்கள். அவ்விலட் சியத்தை உங்கள் உள்ளத்திலேயே பூட்டி வைத்துக் கொள்ளுங்கள். உமது இலட்சியத்தை அனைவரி டமும் சொல்லித் திரியாமல் இருப்பது நல்லது.

மாறாக, உங்கள் அன்பிற்குரியவர்களிடம் மட்டும் சொல்வது நல்லது. ஏனெனில், உமது இலக்கை அடையக் கூடிய சில வழிகளை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய தாக இருக்கும். ஆகவே, இன்றே உமது இலக்கை நோக்கிப் புறப்படுங்கள். உமது இலட்சியப் பயணத்தில் ஏராளமான தடைகளை நிச்சயமாக நீங்கள் சந்திக்கலாம். அவை நோய்களாகவோ வறுமையாகவோ குடும்பத்தின் சில பிரச்சினைக ளாகவோ இருக்கலாம். இது போன்ற இன்னும் பலவோ ஏற்படலாம். அவற்றைக் கண்டு ஒரு போதும் உமது இலட்சியத்தை விட்டுவிட வேண்டாம். அவற்றையும் ஓர் அனுபவமாக எடுத்துக் கொண்டு மனம் தளராது உங்கள் இலட்சியத்தை அடைய முயற்சி செய்யுங்கள்.

உலகில் சாதனைகள் பல படைத்த மாமனிதர்கள் அனைவருமே துன்பங்களுடன் தன் இலட்சி யத்தை அடைந்தவர்கள் என்பதை மறந்து விடா தீர்கள்.

**"துன்பம் இல்லாமல் இன்பத்தை அடைந்தவனுக்கு அவனடைந்த இன்பமே ஒரு நாள் துன்பமாகும்."**

# பேராசான் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹுு அன்ஹுு)

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்கள் அறிவால் அழகு பெற்ற ஒரு ஸஹாபியா வார். இவர் ஹிஜ்ரத்திற்கு முன் பிறந்தார் என வரலாற் றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். நபியவர்களது பெரிய தந்தையான அப்பாஸ் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்களின் மகனான இவர், அறிவைத் தேடுவதிலும் அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதி லும் அதிக ஈடுபாடுடையவராகக் காணப்பட்டார். நபியவர்கள் மரணிக்கும்போது இவருக்கு 10 வயதே நிரம்பியிருந்தது. ஆயினும், 1660 ஹதீஸ்களை அறிவிக்கும் அளவிற்கு இவர் ஹதீஸ் துறையில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

பிற்காலத்தில் இவர் சுல்தானுல் முபஸ்ஸிரீன் (அல்குர்ஆன் விளக்கவுரையாசிரியர்களின் அரசர்) எனப் போற்றப்படும் அளவுக்கு தப்ஸீர் துறையிலும் சிறப்புற்றிருந்தார். இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்கள் பிறந்தபோது நபிகளாரின் முபாரக்கான உமிழ்நீரினால் இனிப்புப் பொருள் தஹ்னீக் செய்து கொடுக்கப்பட்டார். இது இவருக்கு கிடைத்த ஒரு பெரும் பாக்கியம் என்றும் கூறலாம்.

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர் கள் பின்னாளில் அல்குர்ஆன், ஹதீஸ், வாரிசுரிமை பற்றிய தஜ்வீத் சட்டங்கள், அரபுமொழி, இலக்கியம், கவிதை என அனைத்தையும் கற்பிக்கும் பேராசா னாக விளங்கினார். இவர் யாரிடமாவது ஹதீஸ் ஒன்று இருக்கிறது என்று அறிந்தால் அது எவ்வளவு தூரமாக இருந்தபோதிலும் நீண்ட பிரயாணம் செய்து அந்த ஹதீஸை தேடிச் சென்று கற்றுக் கொள்வார். அந்தளவிற்கு இவரிடம் அறிவுத் தாகம் நிரம்பி இருந்தது.

அறிவில் சிறந்து விளங்கிய அறிவுலக மேதை இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்கள் தன் 71ஆவது வயதில் மரணித்தார். இவர் மரணித்தாலும் இவரது அறிவுச் செல்வம் என்றும் நிலைத்து நிற்கும், இன்ஷா அல்லாஹ்!

**எம்.எம். முஸ்தாக் அஹமட்**
**தரம் 9க/ அஸ்ஹர் கல்லூரி**
**அக்குறனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர்கள் இன்று ஒப்படை மற்றும் ஏனைய கல்விப் புறச்செயற்பாடுகளுக்காக அதிகம் தேடிக் கற்க வேண்டியவர்களாக உள்ளனர். ஆனாலும் தமிழ்மொழி மூலமான இணையதளங்களில் இத்தகைய தகவல்கள் குறைவாகவே காணப்படுகின்றன. இந்தக் குறையை ஓரளவு நிவர்த்தி செய்வதற்கு அகரம் இணையம் முயற்சிக்கிறது.

குறிப்பாக, இலங்கை மாணவர்களுக்குத் தேவையான கல்வி வழிகாட்டல்களை வழங்க இத் தளம் தயாராக இருக்கிறது. கல்வியியல் துறை சார்ந்த வளவாளர்களைக் கொண்டு நாம் மாணவர்களுக்குத் தேவையான கல்வி வழிகாட்டல்களை வழங்கவுள்ளோம். இதன் ஆரம்பப்

# அகரம் இணையதளம்

# புதிய வாயில்களைத் திறக்கிறது

## www.aharam.lk

**தகவல்** தொழிநுட்ப உலகில் இணையம் பல புரட்சிகர மாற்றங்களை நிகழ்த்தி வருகிறது. தகவல் பரிமாறும் வேகம் நொடிக்கு நொடி அதிகரித்து வருகிறது. அறிவானது இன்று பலரோடு பகிர்ந்து கொள்ளும் விடயமாக மாறியுள்ளது. எல்லை தாண்டிய தகவல், அறிவுப் பரவலுக்கு இணையம் துணை செய்கிறது. இந்த மாற்றங்களையும் வேகத்தையும் எதிர்கொள்ளத்தக்கதாக இளைய தலைமுறை தயார்படுத்தப்பட வேண்டும். அந்த வகையில், எம்மோடு சேர்ந்து பயணித்துக் கொண்டிருக்கும் இளைய தலைமுறையை காலத்தோடு இணைத்துக் கொண்டு செல்ல அகரம் களமமைக்கிறது.

மாணவர்களுக்கு இணையதளத்தில் எழுதுவதற்கு அகரம் களம் அமைத்துக் கொடுக்கிறது. உங்கள் ஆக்கங்களை அகரம் சஞ்சிகைக்கு அனுப்புவது போலவே அகரம் இணையதளத்திற்கும் அனுப்பலாம். மின்னஞ்சலிலும் உங்கள் ஆக்கங்களை அனுப்பலாம். கட்டுரைகள், கவிதைகள், பொது அறிவுத் தகவல்கள், கல்வி வழிகாட்டல், நேர்காணல் போன்ற பல அம்சங்களுடன் அகரம் இணையதளம் உங்களுக்கான வாயில்களைத் திறந்து வைத்திருக்கிறது.

படியாகவுமே இவ் இணையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளை அறிமுகப்படுத்தி அவற்றின் இணையதளங்களோடு இணைப்பை ஏற்படுத்தி மாணவர்களின் கல்வி அடைவுகளையும் சாதனைகளையும் பலரோடு பகிர்ந்து கொள்ளவும் அகரம் இணையதளம் களமமைக்கிறது. ஏலவே சமூக வலைத்தளங்களில் இலங்கையில் பிரபலமான பேஸ்புக்கில் இணைந்து நல்ல பல விடயங்களை மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இம் முயற்சி தொடர்பாக உங்கள் ஆலோசனைகள், கருத்துக்கள், இத்தளத்தில் செய்ய வேண்டிய மாற்றங்கள் என்பவற்றை எம்மோடு எந்நேரமும் தொடர்பு கொண்டு பேசலாம். எழுதி அனுப்பலாம். உங்களது ஆலோசனைகள் எமக்கு என்றும் பக்கபலமாய் அமையும். எமது முயற்சிகள் தொடர உங்கள் நல் ஆதரவும் ஆலோசனையும் என்றென்றும் கைகொடுக்கும்.


www.aharam.lk
editor@aharam.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Gradual என்றால் கட்டம் கட்டமாக நகர்வது, படிப்படியாகச் செயற்படுதல் என்ற கருத்தைத் தரும். இது ஓர் உலக நியதி. ஒவ்வொரு செயற்பாடும் நிகழ்வும் கட்டம் கட்டமாகவே நிகழ்கின்றது. இவ்வாறு கட்டம் கட்டமாக செயற்படுகின்ற போதுதான் நிலையான வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒருமுறை மிம்பரில் ஏறும்போது 03 முறை ஆமீன் கூறினார்கள். அதில் ஒன்றுதான், "யார் ரமழான் மாதத்தை அடைந்தும் பாவமன்னிப்பு பெறவில்லையோ, அவர் நாசமடைவாராக!" என்ற பிரார்த்தனையாகும்.

ஜே.எம். அஸீம் (நளீமி)



காணும் பல்வேறு நிகழ்வுகள் இதனை எம் கண் முன்னே நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

மனித வாழ்க்கையில் குழந்தை, வாலிபம், வயோதிபம் என்ற கட்டம், அதே போல் ஏனைய உயிரினங்களின் வாழ்க்கையிலும் வாழ்க்கைக் கட்டங்கள், பருவ காலங்கள், கட்டம் கட்டமாக மாறிமாறி வருதல் என்பது போன்ற பல்வேறு உண்மைகளை நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால், எமது வாழ்வை வசந்தமாக்கத்

# கட்டம் கட்டமாக முன்னேறுவோம்; வெற்றிப் பாதையில் பயணிப்போம்!

நோன்பாளிகளுக்கு ரய்யான் எனும் சுவனவாயில் திறந்திருக்கின்றது. ரமழானின் இறுதி இலக்காகவும் இது காணப்படுகின்றது. அதேபோல் ரமழானும் ரஹ்மத், மஃபிரத், இத்கும் மினன்னார் என்ற கட்டம் கட்டமான செயற்பாடுகளை எமக்குக் கற்றுத் தருகிறது.

மகத்தான மாற்றங்களுக்கு அடிப்படையாக அமைந்த அல்குர்ஆன் அருளப்பட்டது இந்த ரமழானில்தான். இஸ்லாத்தின் வெற்றியின் ஆரம்பக் கட்டம்தான் பத்ர்; வெற்றியின் சிகரம் மக்கா வெற்றி. இவையிரண்டும் நிகழ்ந்ததும் இம் மாதத்தில்தான். இத்தகைய கட்டம் கட்டமான வெற்றிகள் கிட்டிய மாதம் என்ற வகையில் இம் மாதம் முக்கியத்துவமும் சிறப்பும் பெறுகிறது.

நோன்பு நோற்கிறோம் என்று சாக்குப் போக்கு சொல்லி நாம் எத்தனை வெற்றிகளின் அத்திபாரத்தையும் சிகரத்தையும் எத்தனை ரமழான்களில் தொலைத்திருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் திட்டமிடுகின்றபோது இந்தக் கட்டம் கட்டமான நகர்வு (Gradually) என்ற நியதியைக் கவனத்திற்கொள்ள வேண்டும். அன்றாடம் நாம் திட்டமிடுகின்ற போது இவற்றை மறந்து விடுகிறோம். ஒரே தடவையில் ஜெயித்துவிட வேண்டுமென்றும் சாதனை படைத்துவிட வேண்டுமென்றும் எண்ணுகிறோம்.

மாணவர்களாகிய நீங்கள் உங்களுடைய கல்வி வாழ்விலும் இத்தகைய கட்டம் கட்டமான நகர்வைத்தான் தாண்டிக் கொண்டிருக்கின்றீர்கள். முன்-பள்ளிப் பருவம், ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்கல்வி, மேற்படிப்பு என்ற கட்டம் கட்டமாக நகர்வையும் அதற்குள்ளும் ஒவ்வொரு வருடமும் 1ஆம், 2ஆம், 3ஆம் தவணைப் பரீட்சைகள், தரம் 05, க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) என்ற தேசிய பரீட்சைகள் என கட்டம் கட்டமாகவே உங்கள் கல்வி வாழ்வும் நகர்கின்றது.

நாம் அறிந்தோ அறியாமலோ இவ்வாறான கட்டம் கட்டமான நகர்வு எமது வாழ்வில் இழையோடியிருக்கின்றது என்பதை இப்போது நாங்கள் புரிந்திருப்போம். எனவே, திட்டமிடுகின்றபோது இத்தகைய படிப்படியான நகர்வுகளாகவே எமது அனைத்து செயற்பாடுகளையும் திட்டமிட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஓட்டப் பந்தய வீரர்கள் தமது ஓட்ட வேகத்தை கட்டம் கட்டமாக அதிகரிப்பார்கள். அதாவது 10 செக்கன்களில் 100மீ. ஓடி முடித்தால் மீண்டும் கடுமையாக பயிற்சி செய்து அதை விடக் குறைந்த நேரத்தில் குறிப்பிட்ட 100 மீற்றரை ஓடிக் கடக்க முனைவர். இவ்வாறு கட்டம் கட்டமாக முன்னேறி ஒலிம்பிக் வரை சென்று சாதனை புரிவர். சாதனைகளுக்குப் பின்னாலுள்ள இத்தகைய கட்டம் கட்டமான நகர்வுகளை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். அப்போதுதான் வெற்றிப் பாதையில் பயணிக்க முடியும்.

## தடுக்கி விழும் கட்டங்கள்

நாம் எவ்வளவு நுணுக்கமாக கட்டம் கட்டமாக திட்டமிட்டாலும் எமது அனைத்துக் கட்டங்களும் வெற்றிகரமாக நிறைவேறும் என்றில்லை. அனைத்துக் கட்டங்களையும் வெற்றிபெறுவோம் என்றுமில்லை. அவ்வாறு வெற்றி பெறத் தவறிய கட்டங்களைத்தான் தோல்விகளாக அடையாளப்படுத்துகின்றோம். இத்தகைய தோல்விகள்தான் நாம் தடுக்கி விழுந்த இடங்கள். இவ்வாறு தடுக்கி விழுந்த இடங்களிலிருந்து நம்பிக்கையோடு மீண்டு எழாதபோது எம்மால் வெற்றிக் கட்டங்களில் பயணிக்க முடியாது.

குறித்த இறுதி இலக்கு (Vision) நோக்கிப் பயணிப்பதிலேயே இத்தகைய கட்டங்கள் இலக்குகளாக (Goals & Objectives), மைல்கற்களாக (Milestone) அடையாளப்படுத்தப்படும். ரய்யானையும் நபிகளாரின் பிரார்த்தனையையும் இலக்காகக் கொண்ட ரமழானின் கட்டங்களில் பயணிக்கும்போது நாம் இவற்றை சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும்.

## கால நிர்ணயமும் கட்டம் கட்டமான நகர்வும்

ஒவ்வொரு கட்டத்தையும் கடந்து செல்வதற்கு அல்லது தாண்டுவதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் தேவைப்படும். அந்த குறிப்பிட்ட கால அளவை நாம் இந்தக் கட்டம் கட்டமான செயற்பாடுகளில் பிரயோகிக்க வேண்டும். சில கட்டங்களுக்கு குறித்த கால அளவை மாற்ற முடியாது. உதாரணமாக, விவசாயி தனது ஒரு போகத்தைத் தவறவிட்டால் மறு போகத்திற்கு காத்திருக்க வேண்டிய கால அளவை மாற்ற முடியாது. மற்றும் சில கட்டங்களில் கால அளவை குறைக்க முடியும். உதாரணமாக நாம் ஏலவே கூறிய ஓட்டப்போட்டி உதாரணம்.

## படிப்படியான செயற்பாடுகளின்போது மாற்றங்களை எதிர்கொள்ளல்

நாம் திட்டமிட்டபடி படிப்படியாக நகர்ந்தாலும்கூட பல மாற்றங்கள் நிகழ வாய்ப்புள்ளது. அத்தகைய மாற்றங்களை எதிர்கொள்வதற்குத் தயாரான மனோநிலையில் நாம் இருக்க வேண்டும். அவ்வாறு மாற்றங்களை எதிர்கொள்வதற்குத் தயாரான மனோநிலையில் இருந்தால் மாற்றங்கள் எம்மை ஏமாற்றிவிடாது பார்த்துக் கொள்ளலாம். மாற்றங்களை ஏற்பதற்கும் எதிர்கொள்வதற்கும் தயாரில்லாத மனோநிலை எம்மை தோல்வியின் பக்கம் அழைத்துச் சென்றுவிடும்.

## எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்ளல்

கட்டம் கட்டமான நகர்வுகளின்போது நாம் ஏலவே திட்டமிட்ட விடயங்கள் பல மாறியிருக்கும். எனவே, ஒரு கட்டத்தில் திட்டமிட்டது மறு கட்டத்தில் மாற்றமடைந்திருக்கும். இதனை நாம் எதிர்கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும். இதற்கு பதிலீட்டுத் திட்டமிடல் (Contingency Planning) உதவும். ஒருபோதும் நாம் ஒரே ஒரு திட்டத்தையும் ஒரே ஒரு வழிமுறையையும் வைத்துக் கொண்டு வெற்றி நோக்கிப் பயணிக்க முற்படக் கூடாது. ஏனெனில், நாம் ஏற்கனவே கூறிய நிலைமைகளை எதிர்கொள்ளத் தயாராக உள்ளவர் சமயோசிதமாக பல திட்டங்களை வகுத்திருப்பார். அதில் பிரதானமானதுதான் பதிலீட்டுத் திட்டமிடல். தனது பிரதான திட்டம் நிறைவேறுவதற்கு சாத்தியங்கள் குறைகின்றபோது, அத் திட்டத்தின் வழிமுறைகளில் தடைகள் ஏற்படுகின்றபோது பதிலீட்டுத் திட்டம் வினைத்திறனாக செயற்பட உதவும்.

நாம் திட்டத்தை ஒரே அடியில் செய்துவிட முடியாது. அதனைப் பல படித்தரங்களிலேயே செய்ய வேண்டும். உதாரணமாக, ஒரு கட்டடத்தைக் கட்டுவதென்றால் எப்படி ஒரு கல்லின் மீது இன்னொரு கல்லை படிப்படியாக வைத்து அந்தக் கட்டடத்தைக் எழுப்புகிறோமோ அதேபோல்தான் திட்டமிடும்போதும் திட்டத்தை அமுல்படுத்தும்போதும் படிப்படியாகவே செய்ய வேண்டியுள்ளது. இதற்காகத்தான் Vision ஐ அடைவதற்கு இலக்குகள் வரையப்படுகின்றன. அவ்விலக்குகள்தான் திட்டமிடலின் படிப்படியான கட்டங்கள். ஏனெனில், சிலபோது சில விடயங்களின் முடிவுகள் உடனே கிடைப்பது இல்லை. அவற்றிற்குக் காத்திருக்க வேண்டும். ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்களின் வாழ்க்கையில்கூட கட்டம் கட்டமான செயற்பாட்டிற்கான ஏராளமான மாதிரிகளைக் காணலாம். இந்தக் கட்டம் கட்டமான நகர்வுதான் அவர்களுக்கு வெற்றியைத் தந்தது.

(25ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,11 தர மாணவர்களுக்கானது
# விஞ்ஞானம்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

## விசையும் நேர்கோட்டியக்கமும் - தரம் 10

- **தூரம் (d):** ஒரு பொருள் இயங்கும் பாதையின் நீளம் தூரம் எனப்படும். (அலகு -m)

  **இடப்பெயர்ச்சி (s):** ஒரு பொருளின் இட அமைவில் ஏற்பட்ட மாற்றம் இடப்பெயர்ச்சி எனப்படும். (அலகு -m)

  **கதி:** ஓரலகு நேரத்தில் பயணஞ் செய்த தூரம் கதி எனப்படும். (அலகு $ms^{-1}$)

  **வேகம் (v):** ஓரலகு நேரத்தில் ஏற்படும் இடப்பெயர்ச்சி வேகம் எனப்படும். (அலகு $ms^{-1}$)

  **ஆர்முடுகல் (a) :** ஓரலகு நேரத்தில் ஏற்படும் வேக மாற்றம் ஆர்முடுகல் எனப்படும். (அலகு $ms^{-2}$)


*01.* பின்வரும் வரைபுகளின் படித்திறன் எக்கணியத்தைக் குறிக்கும் என்பதை எழுதுக.

i. தூர நேர வரைபு:....................................

ii. இடப்பெயர்ச்சி நேர வரைபு :................

iii. வேக நேர வரைபு:.................................

*02.* ஒரு மோட்டார் வாகனம் ஓய்விலிருந்து பயணத்தைத் தொடங்கி 90 s நேரத்திற்கு இயங்கி மீண்டும் ஓய்விற்கு வரும் வரையான இயக்கத்தை அருகிலுள்ள வரைபு காட்டுகின்றது.




i. இதன் உயர் வேகம் யாது?

ii. இதன் ஆர்முடுகல் யாது?

iii. வாகனம் சீரான வேகத்துடன் இயங்கிய தூரத்தைக் காண்க.

iv. இறுதி 10s இல் வாகனத்தின் ஆர்முடுகலைக் காண்க.

v. வாகனம் பயணித்த மொத்த தூரத்தைக் காண்க.

vi. வாகனத்தின் சராசரி வேகம் யாது?

### இயக்க சமன்பாடுகள்

| | |
|---|---|
| 1ம் இயக்க சமன்பாடு : | $V=u+at$ |
| 2ம் இயக்க சமன்பாடு: | $S=\frac{(v+u)}{2}\times t$ |
| 3ம் இயக்க சமன்பாடு: | $V^2=u^2+2as$ |
| 4ம் இயக்க சமன்பாடு: | $S=ut+\frac{1}{2}at^2$ |

### உராய்வு விசை (F)

- உருட்டி விடப்படும் பந்து அல்லது தள்ளி விடப்படும் பொருள் சிறிது தூரத்தில் ஓய்விற்கு வரும். இதற்குக் காரணம், அப்பொருளின் மீது மேற்பரப்பினால் ஏற்படுத்தப்படும் உராய்வு ஆகும்.
- ஒன்றையொன்று தொடும் இரு மேற்பரப்புக்களில் ஒன்று இயங்க ஆரம்பிக்குமாயின் அதன் இயக்கத்தை எதிர்க்கும் வண்ணம் மற்றைய மேற்பரப்பினால் வழங்கப்படும் மறுதாக்கம் உராய்வு விசை ஆகும்.
- பொருள் இயங்க ஆரம்பிக்கும் கணத்தில் உயர் உராய்வு விசை ஏற்படும். இது எல்லை உராய்வு விசை எனப்படும். இது 2 காரணிகளில் தங்கியிருக்கும்.

  1. செவ்வன் மறுதாக்கம் (R)
  2. மேற்பரப்பின் தன்மை

- உராய்வு விசைக்கான சமன்பாடு $F=\mu R$

  ($\mu$)-உராய்வுக் குணகம்

- பொறிகளில் உராய்வு அதிகம் ஏற்படுவதனால் தோன்றக்கூடிய பிரதிகூலமான விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

- பொறிகளில் உராய்வு விசையை இழிவாக்கு வதற்கு கையாளப்படும் வழிகள் (உபாயங் கள்) நான்கை எழுதுக.

## நியூற்றனின் இயக்க விதிகள்

**1ம் இயக்க விதி:** சமவளவான புறவிசை தாக்காவிடின் ஒரு பொருள் ஓய்வில் இருக் கும் அல்லது சீரான வேகத்துடன் குறித்த திசையில் தொடர்ந்து இயங்கும்.

**2ம் இயக்க விதி :** ஒரு பொருளில் தோற்று விக்கப்படும் உந்த மாற்றவீதம் அதில் தாக்கும் புற விசைக்கு நேர் விகித சமனாகும்.

இதிலிருந்து பெறப்படும் சமன்பாடு $F=ma$
$m$=திணிவு, $a$=ஆர்முடுகல்


**3ம் இயக்க விதி:** ஒவ்வொரு தாக்கத்திற்கும் பருமனில் சமமானதும் திசையில் எதிரானது மான மறுதாக்கம் காணப்படும்.

03. நியூற்றனின் 1ம் இயக்க விதிக்கு அமைவா கவுள்ள உதாரணங்கள் இரண்டை எழுதுக.

04. ரொக்கட்டுகள் மேல்நோக்கிச் செல்லுதல், கடலில் படகு செல்லுதல் என்பவற்றுடன் தொடர்பாக அமையும் நியூற்றனின் இயக்க விதி எது?

## விசைகளின் சமநிலை


05. மூன்று விசைகள் தாக்கி சமநிலையில் இருக் கும் விதம் பின்வரும் உருவில் தரப்பட் டுள்ளது.




i. இம்மூன்று விசைகளும் சமநிலையில் இருப்பதற் கான 2 நிபந்தனைகளை எழுதுக.

ii. இம்மூன்று விசைகளின் சமநிலையை விசை முக் கோணி மூலம் காட்டுக.

06. 1m நீளமான 10N நிறையுடைய கோலொன் றில் திரும்பற் புள்ளியிலிருந்து வெவ்வேறு தூரங்களில் இரு பொருட்கள் சமநிலையில் இருப்பதை உரு காட்டுகின்றது




i. நிறை W இன் பருமனைக் காண்க.

ii. இங்கு பொறுதியினால் ஏற்படுத்தப்படும் மறுதாக்கத்தின்அளவைக் காண்க.

## உயிரியல் - இயைபாக்கம், ஒருசீர்த்திட நிலை - தரம் 11

- இயைபாக்கம்: அகப் புறச் சூழல்களில் ஏற்ப டும் மாற்றங்களுக்கு உடலின் அங்கங்களும் தொகுதிகளும் ஒருங்கிணைந்து தொழிற்ப டல் இயைபாக்கம் ஆகும்.

01. பின்வரும் வழிகள் மூலமாக நடைபெறும் இயைபாக்க முறைகளை எழுதுக.

i. நரம்புக் கணத்தாக்கம் மூலம்:
ii. ஓமோன்கள் மூலம்:

- நரம்பியைபாக்கத்தை மேற்கொள்ளும் தொகுதி நரம்புத் தொகுதியாகும். இது 2 வகைப்படும்.

i. மைய நரம்புத் தொகுதி:- மூளை, முண் ணான்

ii. சுற்றயல் நரம்புத் தொகுதி: - மூளையிலிருந்து உருவாகும் 12 சோடி நரம்புகள், முண்ணா னிலிருந்து உருவாகும் 31 சோடி நரம்புகள்

- மனித மூளையின் பகுதிகளும் தொழிற்பாடும்

| மூளையின்பகுதி | தொழிற்பாடுகள் |
|---|---|
| மூளையம் | 1. இச்சைவழி செயற்பாடுகளை ஆளுதல்<br>2. புலனுணர்வுகளை இனங்கண்டறிதல்<br>3. கற்றல், ஞாபகம், நுண்ணறிவு, சிந்தனை போன்ற தொழிற்பாடுகளைப் பதிதல் |
| மூளி | 1. வன் கூட்டுத்தசைகளின் இயக்கத்தை மேற்கொள்ளல்<br>2. உடற் சமநிலையை ஏற்படுத்தல் |
| நீள்வளைய மையவிழையம் | 1. இதயவடிப்பு, சுவாசம், வாந்தி போன்ற இச்சையின்றிய செயற்பாடுகளை கட்டுப்படுத்தும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தெறிவினை


மிக மிகக் குறுகிய காலத்தில் தூண்டல் ஒன்றிற்கு மூளை அல்லது முண்ணானினால் காட்டப்படும் இச்சையின்றிய துலங்கல் தெறிவினை ஆகும்.

02. பின்வரும் தெறிவினை வகைகளுக்கு 2 உதாரணங்கள் வீதம் எழுதுக.

i. மண்டையோட்டுத் தெறிவினை:............

ii. முண்ணான் தெறிவினை:......................

03. தெறிவினையொன்றின்போது கணத்தாக்கம் கடத்தப்படும் பாதையை உரு காட்டுகின்றது.




i, a,b,c,d என்பவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக

ii. தெறிவினைச் செயற்பாட்டின்போது கணத்தாக்கம் செல்லும் பாதையை a,b,c,d எனும் எழுத்துக்களைப் பயன்படுத்தி அம்புக் குறி மூலம் காட்டுக.

iii. மேற்படி படத்தினால் காட்டப்படுவதற்குப் பொருத்தமான தெறிவினைக்கான ஓர் உதாரணத்தைக் குறிப்பிடுக.

iv. தெறிவினைச் செயற்பாடு ஓர் உயிர் காக்கும் செயற்பாடாகும். வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளின் தெறிவினைக் கதி குறைவதற்கு ஏதுவான இரு காரணிகளைக் குறிப்பிடுக.

04. புலனங்கங்கள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

i. தோலினால் உணரப்படும் உணர்வுகளின் 5 வகைகளும் எவை?

ii. நுனி நாக்கில் எச்சுவைகளை உணரக்கூடிய அதிகளவு சுவை அரும்புகள் காணப்படும்?

iii. கண்ணின் விழித்திரையில் விம்பங்களை உணரும் இருவகை நரம்புக் கலங்களும் எவை?

iv. செவியிலுள்ள உடற் சமநிலையைப் பேணுவதில் பங்காற்றும் பகுதி எது?

v. கண்ணில் குறும்பார்வைக் குறைபாடு ஏற்படுவதற்கான 2 காரணங்களைக் குறிப்பிடுக.

## இரசாயன இயைபாக்கம்

- இது ஓமோன்கள் மூலமாக நடைபெறுகின்றது.
- அகஞ்சுரப்பிகளினால் சுரக்கப்பட்டு குருதியினால் கொண்டு செல்லப்பட்டு இன்னோர் இடத்தில் தொழிற்பட்டு அவ்வங்கம் அல்லது இழையத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் சேதன இரசாயனப் பதார்த்தம் ஓமோன் ஆகும்.

05. பின்வரும் ஓமோன்களினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகளை எழுதுக.

i. தைரொட்சின்: ....................................

ii. இன்சுலின்:............................................

iii. அதிரினலின்:.........................................

iv. ஈஸ்திரஜன்: ..........................................

## ஒரு சீர்த்திடநிலை

- உடலின் அகச்சூழல் நியம நிலையில் பேணப்படல் ஒரு சீர்த்திடநிலை எனப்படும்.
- வெப்பநிலை, குளுக்கோசு செறிவு, நீர்ச்செறிவு என்பன இவ்வாறு நியமமாகப் பேணப்படுகின்றன.

06. i. சூழல் வெப்பநிலை சாதாரண மட்டத்திலும் பார்க்க அதிகமாகவுள்ளபோது உடல் வெப்பநிலையைக் குறைக்க நிகழும் செயற்பாடுகள் இரண்டை எழுதுக.

ii. சுகதேகியொருவரின் குருதியில் உயர் குளுக்கோசு செறிவு ஏற்படும்போது நிகழும் 2 மாற்றங்களைக் குறிப்பிடுக.

## தாவர வளர்ச்சிப் பதார்த்தங்கள்

- தாவரங்களினால் சுரக்கப்பட்டு தாவர வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும் பதார்த்தங்கள் தாவர ஓமோன்கள் எனப்படும்.

07. பின்வரும் தாவர ஓமோன்களினால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு தொழிற்பாட்டை எழுதுக.

i. ஒட்சிசன்:

ii. ஜிபரெலின்:

iii. சைற்றோகைனின்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'ஆள் பாதி ஆடை பாதி'** என்பார்கள். ஆனால் இந் தப் பழமொழியை இன்று பலர் தவறாகப் புரிந்து கொண்டார்களோ என்று ஐயம் கொள்ள வேண் டியிருக்கிறது. ஏனெனில் இன்று பலரும் 'பாதி ஆடைதான்' அணிகிறார்கள்.

ஆனால், இஸ்லாமியத் திருநெறி ஆடை குறித்த சில ஒழுங்குகளை நமக்குக் கற்றுத் தருகிறது. ஆடையை இறைவனின் அருட்கொடை என்று குர்ஆன் கூறுகிறது.

**"ஆதத்தின் மக்களே...! உங்களுடைய வெட் கஸ்தலங்களை மறைப்பதற்காகவும் உங்கள் உடலுக்குப் பாதுகாப்பாகவும் அலங்காரமாகவும் இருக்கக்கூடிய ஆடைகளை நாம் உங்களுக்கு அருளியிருக்கிறோம்."**

**(அல்குர்ஆன் 7: 26)**

# புத்தாடை அணியும்போது...


-சிராஜுல் ஹஸன்-

இதிலிருந்து நாம் அணியும் ஆடை கண்ணிய மானதாகவும் அழகாகாவும் உடலைப் பாதுகாக் கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். நாம் அணியும் ஆடை நம்மைக் கோமாளியாகவோ கேலிக்குரிய ஆளாகவோ ஆக்கி விடக்கூடாது.

புத்தாடை அணியும்போது மகிழ்ச்சி கொள் ளுங்கள். இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். இறையருள் இல்லையெனில் இந்த ஆடை நமக்குக் கிடைத்திருக்காது என்பதை நினைவில் வையுங்கள்.

புத்தாடை அணியும்போது பின்வருமாறு பிரார்த்திக்கும்படி இறைத் தூதர் நமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள்:

"இந்த ஆடையை எனக்கு வழங்கிய இறை வன்தான் எல்லாப் புகழுக்கும் உரியவன். இத னைக் கொண்டு என் வெட்கஸ்தலங்களை மூடி மறைக்கிறேன். மேலும் என் வாழ்வில் அழகும் அலங்காரமும் இதன் மூலம் உருவாகின்றன."



எவர் இந்தப் பிரார்த்தனையைப் புரிகின்றாரோ அவருக்கு இறைவன் இந்த உலக வாழ்விலும் மறுமை வாழ்விலும் தன்னுடைய பாதுகாப் பையும் கண்ணியத்தையும் அளிக்கிறான் என்றும் அண்ணலார் கூறியுள்ளார்கள்.

ஆனால், பெருமைக்காவும் ஆடம்பரத்துக்கா கவும் ஆணவத்தை வெளிப்படுத்தும் வகையிலும் ஆடை அணிவதை இறைத்தூதர் தடுத்துள்ளார்கள்.

"யார் பெருமைக்காக ஆடை அணிகிறார்களோ அவர்களை இறைவன் மறுமை நாளில் பார்க் கவும் மாட்டான்" என்று எச்சரித்துள்ளார்கள்.

ஆண்கள் பட்டாடை அணிவதை இறைத் தூதர் வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். "அது பெண்களுக்குரிய ஆடை" என்று பெண்களுக்கு மட்டுமே அனுமதித்தார்கள்.

உடல் உறுப்புகளை வெளியே காட்டும் அள வுக்கு மெல்லிய ஆடைகள் அணிவதற்கும் மிக இறுக்கமாக உடை உடுத்துவதற்கும் இஸ்லாமி யச் சட்டத்தில் இடமில்லை.

கண்ணியமாக உடை உடுப்போம். கண்ணிய மானவர்களாய் நடந்து கொள்வோம்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஹம்மத் மஹ்மூத் ஸவ்வாப்

எம்.இஸட்.எம். மஸ்ஹர் (நளீமி)



**அல்லாஹ்வின்** பாதையில் வாழ்ந்து மரணிப்பவர்கள் மரணித்த பின்னரும் மனித உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மனித உள்ளங்களில் தனது கருத்துக்களாலும் சிந்தனைகளாலும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் இஸ்லாமிய அறிஞரே சென்ற நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் மரணித்த பேரறிஞர் முஹம்மத் மஹ்மூத் ஸவ்வாப் (ரஹ்) அவர்கள்.

இமாமுத்தீன் ஸன்கீ, நூருத்தீன் ஸன்கீ போன்ற பெரும் போராளிகளை உருவாக்கிய ஈராக்கின் மவ்ஸில் நகரத்தில் பேரறிஞர் ஸவ்வாப் *1914* இல் பிறந்தார். ஓர் ஈமானிய சூழலில் பிறந்து வளர்ந்ததன் காரணமாக தனது இளம் பராயத்திலேயே அவரால் அல்குர்ஆனை மனனம் செய்து கொள்ள முடிந்தது.

மவ்ஸிலின் பிரபலமான பள்ளிக்கூடமொன்றில் தனது ஆரம்பக் கல்வியை முடித்தபின் பைஸலிய்யா எனும் கல்லூரியில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்து *1936* இல் பட்டம் பெற்று வெளியேறினார். சமூகத்தின் மீதிருந்த அதீத பற்றின் காரணமாக *1930*களில் ஜம்இய்யதுஷ் ஷுப்பான் அல்முஸ்லிமீன் என்ற இயக்கத்துடன் இணைந்து சமூக சேவைகளில் ஈடுபட்டார்.

*1943* இல் எகிப்தில் அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைத் தொடரும் நோக்கில் கெய்ரோ நகரிற்கு சென்றார். அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் மிகத் திறமையான மாணவர்களுள் ஒருவராக அவர் விளங்கியதால் எகிப்திலுள்ள பல அறிஞர்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு அறிஞர் ஸவ்வாபுக்கு கிடைத்தது. அல்அஸ்ஹர் பல்கலைக்கழக மாணவர்களுள் 6 வருடக் கற்கை நெறியை மூன்றே வருடங்களில் நிறைவு செய்த முதல் மாணவராக அறிஞர் ஸவ்வாப் கருதப்படுகின்றார். இவரது திறமையை அவதானித்த அஸ்ஹர் பல்கலைக்கழக நிர்வாகமும் அவருக்கு இந்த சலுகையை ஏற்படுத்திக் கொடுத்தது. பல்கலைக்கழகத்தில் மூன்றே வருடங்களில் கற்கை நெறியை நிறைவு செய்ததைக் கேள்வியுற்ற ஷெய்குல் அஸ்ஹர் முஸ்தபா முராகி, அறிஞர் ஸவ்வாபை கௌரவிக்கும் வகையில், “நீர் ஓர் அற்புதத்தை இங்கு நிகழ்த்தி விட்டீர். இப்பல்கலைக்கழகத்தில் எவருமே செய்யாத ஒரு முன்மாதிரியை ஆரம்பித்து விட்டீர்” என்று வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியால் ஷெய்க் ஸவ்வாபின் புகழ் எகிப்தெங்கும் பரவியது. பல பத்திரிகைகள் அவரது இத்திறமைக்கு வாழ்த்துத் தெரிவித்து செய்தி வெளியிட்டன. இவருக்கும் மற்றும் பல அறிஞர்களுக்கும் இடையில் காணப்பட்ட தொடர்புகள் மேலும் விருத்தியுற்றன. அத்துடன் எகிப்தில் காணப்பட்ட இஸ்லாமிய அமைப்புக்களுடனும் இவருக்கு பரிச்சயம் ஏற்பட்டது. இந்த வரிசையிலேயே ஷெய்க் ஸவ்வாபுக்கும் இஃவானுல் முஸ்லிமீன் இயக்கத்தின் தலைவர் இமாம் ஹஸனுல் பன்னாவுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்பட்டன.

இஃவானிய சிந்தனைகளாலும் இமாம் ஹஸனுல் பன்னாவின் ஆளுமைப் பண்புகளாலும் கவரப்பட்ட ஷெய்க் ஸவ்வாப் தன்னையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஹ்வான்களுடன் இணைத்துக் கொண்டார். இஹ்வானிய சிந்தனைகள் எகிப்துடன் மட்டும் வரையறுக்கப்படாது முழு உலகிலும் பரவ வேண்டும் என்ற இலக்கை சுமந்தவராகவே ஷெய்க் அவர்கள் செயற்பட்டார்கள். இந்த இலக்கை அடைவதற்காக அப்துல் ஹபீழ் ஸைபி (எகிப்து), பழீல் அல்வாதலானி (அல்ஜீரியா), இஸ்மாஈல் முன்தா (இந்தோனேசியா) போன்ற சகாக்களுடன் இணைந்து இஸ்லாமிய உலகுடனான ஒன்றியம் என்ற அமைப்பை நிறுவி இஹ்வானிய சிந்தனைகள் ஏனைய முஸ்லிம் நாடுகளிலும் பரவக் காரணமாக இருந்தார்.

இதனைத் தொடர்ந்து அஸ்ஹர் பல்கலைக் கழக பட்டத்தையும் இஹ்வானிய சிந்தனைகளையும் சுமந்தவராக தாயகம் திரும்பினார். ஷெய்க் ஸவ்வாப் அவர்கள் நீதித்துறையில் பட்டம் பெற்றிருந்ததன் காரணமாக அரசு அவரை நீதிச் சேவையில் பதவி வகிக்குமாறு கேட்டுக் கொண்டது. எனினும், அதனை விரும்பாத அவர் உயர் கலாபீடமொன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். தான் எகிப்துக்கு செல்ல முன்னர் அங்கம் வகித்த ஜம்இய்யதுஷ் ஷுப்பான் அல்முஸ்லிமீன் என்ற அமைப்புடன் தனது தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டார். ஜம்இய்யதுல் அம்ர் பில் மஃரூப் வந்நஹ்யு அனில் முன்கர் என்ற அமைப்பை உருவாக்கி ஈராக்கில் இஸ்லாமிய அழைப்புப் பணிக்கு உயிரூட்டினார்.

ஈராக்கின் மிகப் பெரும் அறிஞராகக் கருதப்பட்ட இமாம் அம்ஜத் ஸஹாவி இஹ்வானிய சிந்தனைகளால் கவரப்படுவதற்கு முக்கிய காரணியாக இருந்தவர் ஷெய்க் ஸவ்வாப் அவர்களே. இருவரும் இணைந்து இஹ்வானிய சிந்தனைகளை உயிர்ப்பிக்கும் நோக்குடன் ஜம்இய்யத்துல் உஹுவ்வா அல்இஸ்லாமிய்யா என்ற அமைப்பை உருவாக்கி லிவாஉல் உஹுவ்வா அல்இஸ்லாமிய்யா என்ற சஞ்சிகையையும் வெளியிட்டனர்.

1948 இல் பலஸ்தீன்-இஸ்ரேல் யுத்தம் ஏற்பட்டபோது இவ்வமைப்பினூடாக ஆயிரக் கணக்கான ஈராக்கிய படை வீரர்களை தயார் செய்து பலஸ்தீனுக்கு அனுப்பி வைத்தார். அத்துடன் பலஸ்தீன பிரச்சினையை உலக முஸ்லிம்களின் பிரச்சினையாக மாற்றுவதில் ஷெய்க் அவர்களின் பங்கு அளவிட முடியாதது. இன்காதுல் பலஸ்தீன் என்ற அமைப்பை உருவாக்கி அவ்வமைப்பினூடாக பலஸ்தீன பிரச்சினையை உலகறியச் செய்தார். பலஸ்தீனுக்கான நன்கொடைகளைத் திரட்டல், படை வீரர்களைத் தயார் செய்தல் போன்ற மிகப் பெரும் பணிகள் 1950களில் இவ்வமைப்பினூடாக இடம்பெற்றன. 1953 இல் இவ்வமைப்பினூடாக முஃதமரு இன்காதில் பலஸ்தீன் என்ற மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இம்மாநாட்டில் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஈராக்கில் ஷெய்க் அவர்களின் தீவிர இஸ்லாமியப் பணியின் காரணமாக அப்போதிருந்த கம்யூனிச சார்பு அரசு ஜம்இய்யதுல் உஹுவ்வா என்ற அமைப்பையும் அதன் உத்தியோகபூர்வ சஞ்சிகையையும் தடை செய்தது. அத்துடன் ஷெய்க் அவர்களையும் 1958 இல் சிறை செய்தது. 1959 இல் ஷெய்க் அவர்கள் விடுதலை செய்யப்பட்டபோதும் தொடர்ந்தேர்ச்சையான கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் அவர் சிரியாவுக்கு தலைமறைவாகிச் சென்றார்.

இஹ்வான்கள் சிரியாவில் மிகப் பெரும் செல்வாக்குடன் காணப்பட்டதன் காரணமாக ஸவ்வாபின் வருகை சிரியர்கள் மத்தியில் அமோக வரவேற்பை ஏற்படுத்தியது. 1962 இல் ஷெய்க் அவர்கள் மக்காவுக்குச் சென்று கற்பித்தல் பணியில் ஈடுபட்டார். ஆரம்பத்தில் கல்வியமைச்சின் ஆலோசகராகப் பணிபுரிந்த ஷெய்க் ஸவ்வாப் அவர்கள், காலப்போக்கில் மன்னர் பைஸலின் தூதுவராகப் பதவியுயர்வு பெற்று பல முஸ்லிம் நாடுகளுக்கும் விஜயம் செய்தார். இதன் மூலம் முஸ்லிம் நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஷெய்க் அவர்களால் கண்கூடாக அவதானிக்க முடிந்தது.

ஆப்கானிஸ்தானில் ரஷ்யர்களுக்கெதிரான ஜிஹாத் ஆரம்பிக்கப்பட்டபோது இது தொடர்பான சிந்தனைகளை உலகறியச் செய்யும் பொறுப்பையும் ஷெய்க் அவர்கள் சுமந்து கொண்டார்கள். ஆப்கானிஸ்தான் முஜாஹித்களுக்கு மத்தியில் கருத்து வேற்றுமை ஏற்பட்டபோது அவர்களுக்கு மத்தியில் இணக்கப்பாட்டை உருவாக்குவதிலும் ஷெய்க் அவர்கள் பெரும் முயற்சி எடுத்து வெற்றி கண்டார்கள். இப்படி உலக முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்த ஒரு மனிதர் 1992 இல் இறையடி சேர்ந்தார். அவரது சங்கையான உடல் மஸ்ஜிதுல் ஹராமுக்கு அருகில் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு)என்ற ஸஹாபியின் மண்ணறைக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்

# தாய்



கனவுகளின் கருவறையாக
நெஞ்சினில் சுமந்தவள்
தூய அன்பு இதுதான் என்பதை
கற்றுத் தந்தவள்

இரு உயிர்கள் ஒன்றாக என்னை
இம் மண்ணிற்கு அழைக்க
ஓடோடி வந்தேன்
என் தாயின் கருவறைக்கு

பத்து மாதம் கருவாய்
அவள் வயிற்றில்
எப்போது அவள் முகம்
காண்பேனென
ஆர்வமாய்க் கிடந்தேன்

கருவாக உதித்தேன்
அவள் வயிற்றில்
அவள் உயிராக வளர்ந்தேன்
அவள் நெஞ்சப் பாசறையில்

எம்.ஏ.எப். அஸீனா
பாத்திமா ஸஹ்றா ம.அ.க
ஓட்டமாவடி 03

# சொர்க்கம் கிடைக்கப் பாடு!

இறைவனிடம் இறைஞ்சி நீ கேளு!
இழைத்து விட்ட பாவங்களைக் கழுவு!
வழிந்தோடும் கண்ணீரைப் பாரு!
வல்லோனின் அன்புக்கு நிகரேது!

கல்நெஞ்சை கறைபடியாது பாரு!
காணுமிடத்தை நல்லதாக மாற்று!
அல்குர்ஆனை தினமும் நீ ஓது!
தீவினைகள் தொடராது கோரு!

பட்ட துயர் போதும் பாரு!
கெட்ட பெயர் வேண்டாம் உனக்கு!
பாவலரை பணிவாகப் போற்று!
பல்கலை உனை நாடும் தேடு!

இறுதி நேரம் சடுதியில் வரும் பாரு!
நற்செயல்கள் செய்திடுவாய்
வேளையோடு
சர்வ சொர்க்கம் கிடைத்திடப் பாடு!

*ரீ.எப். பிரோஸா*
அ/மனாருல் உலூம் ம.வி, கம்பிரிகஸ்வெவ

# வெண்கட்டி

எங்களுக்குக் கல்வியைப் போதிக்க
வெண்கட்டி என்ற பெயரில் உருவானவளே
எங்களுக்கு கல்வியை மட்டுமின்றி
பற்பல புதுமைகளையும் காட்டித் தந்தவளே
ஆசிரியர் என்ற அந்தஸ்தின் மூலம்
பல சாதனைகள் புரிந்தவளே
கல்வி என்ற பெயரில்
உலகையே காட்டித் தந்தவளே

எங்கள் கல்விக்கு
தூணாய் ஓங்கி நிற்பவளே
எங்கள் அறிவிற்கு சிறந்த
அடித்தளமாய் இருந்தவளே
எங்கள் மனதினிலும்
நீ இப்போது இடம் பிடித்து விட்டாய்

எஸ்.எல். சீனதுல் பாஹிமா
தரம் - 8, தி/அல்தாரிக் ம.வி, கந்தளாய்



# அழிவு

உலகில் எல்லாம் அழிந்து விடும்
படைத்த இறைவனைத் தவிர

உலகமே அழிவில் வீழ்ந்துவிடும்
அல்லாஹ்வின் அர்ஷைத் தவிர

உலக இன்பதுன்பமெல்லாம் மறைந்து விடும்
சுவன இன்பத்தையும் நரக துன்பத்தையும் தவிர

உலக மக்களெலாம் மரணித்துயிர் பெறுவர்
அல்லாஹ்வைத் தவிர

உலகில் சேமித்ததெல்லாம் சிதைந்துவிடும்
நன்மையையும் ஈமானையும் தவிர

எம்.எல்.எம். அஜ்மல், தரம் 8
செண். மேரிஸ் மு.ம.வி., நாவலப்பிட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்


# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் I**  **நேரம் 45 நிமிடம்**

முதல் உருவுக்கு சமமான உருவைத் தெரிவு செய்க.




1. i. ii. iii.




2. i. ii. iii.

வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவை தரப்பட்டுள்ள உருக்களில் இருந்து தெரிவு செய்க.



3. i. ii. iii.



4. i. ii. iii.

விலைப்பட்டியலை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| விலைப்பட்டியல் | ரூபா |
|---|---|
| 3 மாம்பழங்கள் | 23. 25 |
| 5 தோடம் பழங்கள் | 57. 50 |
| 2 அன்னாசிப் பழங்கள் | 135.00 |
| 4 அப்பிள் பழங்கள் | 77.00 |

5. 3 அப்பிள் பழங்களின் விலை ரூபா .............
6. 5 அன்னாசிப் பழங்களின் விலை ரூபா ..........
7. 1 தோடம்பழத்தின் விலை ரூபா .................

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

வந்தனம் ஐயா!

வந்தனம், இன்று நேர காலத்துடன் வந்து விட்டாய் போலும்!

ஆம் ஐயா.

சரி காரியாலயத்தை திற.

சரி ஐயா.

ஒப்பமிடும் புத்தகம் எனது மேசையில் இருக்கிறது. அதை அந்த மேசையில் வைத்துவிடு.

வணக்கம் சேர்.

வணக்கம், என்ன விஷயம்?

இன்று அரை நாள் விடுமுறை தேவை.

அப்படியா, உங்கள் வகுப்பிற்கு யார் பொறுப்பு?

பாபு சேர் அதை பார்த்துக் கொள்வதாகக் கூறினார்.

சரி சங்கர், அப்படி என்றால் நீங்கள் போகலாம்.

இப்போது அங்கே என்ன பாடம் நடந்து கொண்டிருக்கின்றது?

கணிதம் சேர், பார்வதி டீச்சர் அங்கே நிற்கிறார்கள்.

அதற்குப் பிறகு எனது பாடம் விஞ்ஞானம்.

நல்லது நீங்கள் போகலாம்.

8. இவ்வுரையாடலில் கலந்து கொண்டோர்.
   i. 5 பேர் ii. 3 பேர் iii. 4 பேர்
9. இவ் உரையாடல் இடம்பெற்ற இடம்.
   i. வகுப்பறை ii. சிற்றுண்டிச் சாலை
   iii. காரியாலயம்
10. அரை நாள் விடுமுறை பெற விரும்பிய ஆசிரியர்.
    i. பாபு ii. சிற்றூழியர் iii. சங்கர்
11. வந்தனம் என்பதற்கான இன்னுமொரு சொல்.
    i. வணக்கம் ii. வருக iii. நல்லவரவாகுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஐயா என்பதற்கான ஆங்கிலப் பதம்.
i. Teacher ii. Sir iii. Principal

13. விஞ்ஞானப் பாடம் கற்பிக்கும் அசிரியர்.
i. பாபு ii. பார்வதி iii. சங்கர்

14. காரியாலயம் என்பதற்கான இன்னுமொரு சொல்.
i. அலுவலகம் ii. வங்கி iii. திணைக்களம்

15. விஞ்ஞானப் பாடம் நடைபெறுவதற்கு முன் நடைபெற்ற பாடம்
i. தமிழ் ii. சமயம் iii. கணிதம்


பின்வரும் சொற்கூட்டங்களில் மிகச் சரியானதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக

i. பாகற்காய், மரவெள்ளி, உருளைக்கிழங்கு

ii. முயற்சி, காய்ச்சல், முட்கள்

iii. ஈர்க்கு, வேர்வை, வெற்றிலை

16. ..............................................................................



17. இவ்வுருவில் உள்ள செங்கோணங்கள் எத்தனை?

18. இவ்வுருவில் உள்ள செங்கோண முக்கோணங்கள் எத்தனை?

19. கீழே உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம் பெறும் சொல்வரிசையின் கீழ் கீறிடுக.

i. இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, கொழும்பு

ii. கோழி, கொக்கு, காகம், பருந்து

iii. குண்டெறிதல், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், ஈட்டி எறிதல்


20. i. காற்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், எல்லே, டெனிஸ்


ii. புடோல், அவரை, மரக்கறிவகை, பாகல்


iii. கண்டி, பதுளை, நுவரெலியா, பண்டாரவளை


பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை எழுதுக.

(முரசு, கரப்பான், உடுக்கை, மேளம், மிருதங்கம்)









21. .......... 22. ........... 23 .......... 24 ...........

பின்வரும் வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள பெயர் அடைமொழிகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

25. அடை மழை காரணமாக வெள்ளம் பாய்ந்தோடியது. ..............................................

26. சிறிய சிட்டுக்கள் அழகிய மலர்களில் தேன் அருந்தின. ..............................................

27. பெரிய கொக்கு சிறிய மீனை கௌவிப் பிடித்தது. ..............................................

பின்வரும் அமைப்பைக் கவனித்து விடை தருக.

28. கா ........ சோலை
பா .......... செய்யுள்
............. குதிரை

29. ஒரு காடு
ஓர் ஊர்
........ ஈட்டி

30. குரு - கெட்டது - ..................... கோழி

31. அணில் .. ........ தேனீ - ரீங்காரமிடும் குரங்கு - அலப்பும்

32. மாணவர் ஐம்பொறிகளையும் அடக்கி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இங்கு குறிப்பிடப்பட்ட ஐம்பொறி.
i. மெய், வாய், குடல், மூக்கு, செவி
ii. மெய், கால், வாய், செவி, மூக்கு
iii. மெய், வாய், கண், மூக்கு, செவி

33. ராமுவின் மகன் ஊதாரியாகவே வாழ்ந்து மறைந்தான். இங்கு ஊதாரி என்பது.
i. ஊர் சுற்றுபவன்
ii. வீண் செலவு செய்பவன்
iii. மிச்சம் பிடித்து வாழ்க்கையை நடத்துபவன்

அடைப்புக்குள் காணப்படும் சொற்களை சரியான இடத்தில் எழுதுக.

34. ................ அருந்தியவன் மயங்கி ......... விழுந்தான். (கழ், கள், கல்)

35. ........ கொட்டிய போதும் ஊழியர்கள் ........ புரிந்தனர். (பனி, பணி)

'அ' பகுதிக்குப் பொருத்தமான விடைகள் 'ஆ' பகுதியில் காணப்படுகின்றன. அதன் குறியீடுகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.

| அ | ஆ |
|---|---|
| 36. பனை ............. | A. மயில் |
| 37. இலத்தி ............ | B. உத்தமர் |
| 38. ஒற்றைக்காலில் நிற்றல் | C. இரட்டைக் கிளவி |
| 39. குழாம் ............ | D. யானை |
| 40. மள மள ............ | E. பிடிவாதம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாப்பத்திரம் i விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. ii | 11. i | 21. கரப்பான் | 31. சீச்சிடும் |
| 2. ii | 12. ii | 22. மேளம் | 32. iii |
| 3. ii | 13. iii | 23. மிருதங்கம் | 33. ii |
| 4. iii | 14. i | 24. உடுக்கு | 34. கள், கல் |
| 5. ரூபா 57. 75 | 15. iii | 25. அடை | 35. பனி, பணி |
| 6. ரூபா 337. 50 | 16. ii | 26. சிறிய, அழகிய | 36. B |
| 7. ரூபா 11.50 | 17. 8 | 27. பெரிய, சிறிய | 37. D |
| 8. iii | 18. 8 | 28. மா | 38. E |
| 9. iii | 19. i | 29. ஓர் | 39. A |
| 10. iii | 20. ii | 30. கை, கைதி | 40. C |



# வகுப்பறையில் நாமும் இப்படிக் கற்றால்...

ரிஃபாயுதீன்

**ஆசிரியர்:** அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்ம துல்லாஹி வபரகாத்துஹு.

மாணவர்கள்: வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்ம துல்லாஹி வபரகாத்துஹு.

**ஆசிரியர்:** இன்று நாம் ஒரு கருவியைப் பற்றிப் பார்ப்போமா?

மாணவர்கள்: Yes Sir! ரொம்ப நாள் ஆயிச்சு சார்...!

**ஆசிரியர்::** இதோ! ஆரம்பிப்போமா? இதன் வெளிப்புறம் ஒலியை உள்வாங்கும் திறன் கொண்டது.

ஆசிக்: மைக் சார்!

**ஆசிரியர்:** இல்லை! இடது பக்கத்தில் இருந்து வலது புறமாக ஒலியைக் கடத்தும்.

சாதிக்: Wooer System 5.1

**ஆசிரியர்:** இல்லை! இல்லை! சாதிக் நிறைய படம் பாத்துருப்பான் போல. இது 20Hz-20KHz வரை இயங்க வல்லது.

பாசித்: FM Radio... Radio Mirchi

**ஆசிரியர்:** ஹா! ஹா! இல்லை! EPS இணைக் கப்பட்டுள்ளது.

அத்தாரிக்: Nokia Latest மொடல்...! Samsung Galaxy

**ஆசிரியர்:** இல்ல நான் சொன்னது GPS இல்லை EPS (Echo Positionning System Stafes) எனும் மிக சின்ன பாகத்தை கொண்டது. இது காற்றால் அடைக்கப்பட்டது.

காலித்: Gas பலூன்...!

**ஆசிரியர்:** ஹா! ஹா அதெல்லாம் இல்லை வெளிப்புறத்தில் படும் ஒலியானது நடுப் புறத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து உட்புறத்தை அடையும். அங்கே அதிர்வை உருவாக்கி ஒலியைப் பெறும்.

பாசில்: முரசு சார்...!

**ஆசிரியர்:** இல்லை! இது மனிதனுக்கு பேலன்ஸ் தர வல்லது. நம் தலை ஆடாமல் இருக்கப் பயன்படுவது. இதனுள் இருக்கும் போனி லாபிரின்த் எனும் சிறு எலும்புப் பகுதி இப்பணியைச் செய்கிறது.

மாணவர்கள்: தெரியல சார்! நீங்களே சொல்லுங்க சார்!

**ஆசிரியர்:** நாம் இவ்வளவு நேரம் பேசியது நம் காதுகளைப் பற்றித்தான் மாணவச் செல் வங்களே! அல்லாஹ் எவ்வளவு அழகாகப் படைத்துள்ளான்!

அல்லாஹு அக்பர்!

**நன்றி: இளம் பிறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்




**வினாப்பத்திரம் II** — **நேரம் 1 மணி 15 நிமிடம்**

1. மரத்தின் மேற்பரப்பை அழுத்தமாக்க உதவும் உபகரணம்.



2. இவ்வுருவில் காணப்படும் சிறிய சதுரங்களின் எண்ணிக்கையை எழுதுக.



3. மின்குமிழ்கள் உலர் மின்கலத்துடன் இணைக்கப்பட்டுள்ள முறைப்படி,




i. A மின்குமிழ் மாத்திரம் ஒளிரும்.

ii. A,B இரண்டு மின்குமிழ்களும் ஒளிரும்.

iii. A,B இரண்டு மின்குமிழ்களும் ஒளிராது.


4. இவ்வுருவில் காட்டப்படுவது.




i. இலங்கையின் முதல் ஜனாதிபதி

ii. இலங்கையின் முதல் பிரதமர்

iii. இலங்கையின் இரண்டாவது ஜனாதிபதி




5. இப்பாத்திரத்தில் உள்ள திரவத்தின் அளவை மில்லி லீற்றரில் எழுதுக. ............ ml




6. இக்கடிகார முகம் பிற்பகல் நேரத்தைக் காட்டுகிறது. நியம நேரத்தில் எழுதுக........

பின்வரும் வசனங்களை ஒழுங்கமைக்குக.

7. மழை- அழிப்பதனால் - வீழ்ச்சி - காடுகளை - குறைவடைகின்றது ...............................

8. மூல - இன்மையே - வியாதிகளுக்கு - காரணம் - பல - சுத்தம் ............................

9. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என்பதற்குப் பொருத்தமான கூற்று.

i. ஊருக்குள் பகை ஏற்பட்டால் ஊரை விட்டு கிளம்பிவிட வேண்டும்.

ii. ஊர் மக்களுடன் பகைப்பதானது எமது அனைத்துக் காரியங்களையும் நாசமாக்குவதற்குச் சமம்.

iii. வேர் கெட்டுப் போனால் ஊர் கெட்டு விடும் என்பதாகும்.

கட்டத்தினுள் காணப்படும் சொற்களை பொருத்தமான இடைவெளிகளில் வைத்து நிரப்புக.

| |
|---|
| i. பச்சைக் கம்பளம் ii. கையுமெய்யுமாக iii. உச்சி குளிர்ந்தாள் iv. அரை அடியற்ற மரம்போல v. சாக்குப் போக்கு |

10. பொலிசாரிடம் திருடன் .................... மாட்டிக் கொண்டான்.

11. சாந்தன் தன் தந்தையின் மரணச் செய்தியைக் கேட்டு ........................................ சாய்ந்தான்.

12. மத்திய மலை நாடு............................ விரித்தாற்போல காட்சியளித்தது.

13. ராமசாமி தொழிலுக்குச் செல்லாது பல .............. கூறி காலத்தைக் கடத்தினான்.

14. மகன் பரீட்சையில் சித்தியடைந்தான் என்ற செய்தியைக் கேட்ட தாய் ..........................

15. தபால் அட்டை ஒன்றைப் பெற விரும்பும் ஒருவர் எவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டும்? ............................................

16. காசுக் கட்டளை ஒன்றைப் பெற ஒருவர் எங்கே செல்ல வேண்டும்? .................................

17. கடல் நீரில் இருந்து பெற்றுக் கொள்ளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவையூட்டி எது?

i. சர்க்கரை ii. கறியுப்பு iii.வெல்லம்

18. பூக்களில் பூவிதழ்கள் கூடுதலாக இருக்கும் பூ எது?

i. செவ்வரத்தை ii. நிலோற்பலம் iii. தாமரை

19. துருத்தி என்னும் உபகரணத்தைப் பாவிக்கும் இடம் எது?

i.நெசவுத் தொழில் ii.கம்மாலை iii. பேக்கரி

20. மூங்கில் தடியைப் பாவித்து விளையாடும் விளையாட்டு எது?

i. கிரிகெட் ii. எல்லே iii. ஹொக்கி

21. வேர்த் தண்டுகளை நடுவதன் மூலம் கன்றுகளைப் பெறும் தாவரங்கள் எவை?

i. தேக்கு, ஈரப்பலா
ii. கறிவேப்பிலை, மல்லிகை
iii. குரோட்டன், மல்லிகை

22. ஒரு பழத்தில் பல வித்துக்கள் உள்ள பழங்கள் யாவை?

i. பப்பாசி, மா ii. பலா, பப்பாசி
iii. மாதுளை, றம்புட்டான்


23. மாம்பழம் ஒன்றின் விலை ரூபா 19.75 ஆகும். 19 மாம்பழங்கள் வாங்க எவ்வளவு பணம் தேவை? ..............................................

24. பின்வரும் பிள்ளைகளை வயதிற்கு ஏற்ப ஏறு வரிசைப்படுத்தினால் கடைசியாக வருபவர் யார்?

i. குமார் 1999- 5-11
ii. கலாம் 1999- 12 -12
iii. கமலன் 1999- 5-10
iv. பாசில் 1999- 5 -5


**எண்கோலத்தை அவதானித்து விடையைக் கண்டுபிடிக்குக.**

25.




i. 16
ii. 12
iii.14

26.




i. 13
ii. 14
iii. 12

27. 9060, 9070, 9080, 9090 ..............................

i. 10,000 ii. 9200 iii. 9100


**பின்வரும் தகவல்களைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**


| | |
|---|---|
| பந்து 1<br>பேனை 1<br>ரூபா. 35.00 | பந்து 3<br>பேனை 1<br>ரூபா. 85.00 |

28. பந்து ஒன்றின் விலை ரூபா ..........................

29. பேனை ஒன்றின் விலை ரூபா .....................

30. நண்பகல் 12.10 மணி. இது சரியான நேரத்திலும் அரை மணித்தியாலம் முந்திச் செல்கிறது. சரியான நேரத்தை எழுதுக. .................






31. இச்சதுரத்தின் பரப்பளவு 4cm ஆகும். நிழற்றப்பட்ட உருவின் பரப்பளவை சதுர சென்றி மீற்றரில் எழுதுக. ...........................

**எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.**

32. கோபம் ............... 33. இரகசியம் ...............

**எதிர்மறைக் கருத்தினை எழுதுக.**

34. இடைச்சி ............... 35. நிபுணன்................

36. ஒன்றன் பால் வாக்கியத்திற்குக் கோடிடுக.

i. காகங்கள் கரைந்தன
ii.வேடன் துரத்திச் சென்றான்
iii. மரம் விழுந்தது

37. உயர்திணை, பன்மை, படர்க்கை வாக்கியத்திற்குக் கோடிடுக.

i. அவன் பொருட்களை கடையில் வாங்கினான்.
ii. மீன்களை செம்படவர்கள் பிடித்தார்கள்.
iii. நரி இரவில் ஊளை இட்டது.

38. மிகச் சரியான வாக்கியம்

i. பறவைக் கூட்டம் கடலில் விழுந்தது.
ii. பறவைக் கூட்டம் கடலில் விழுந்தன.
iii. பறவை கடலில் விழுந்தன.

**கருத்து தரக்கூடிய வாக்கியங்களை எழுதுக.**

39. கலை: .................. 40. களை: ....................

**பின்வரும் சொற்களை நிகழ்காலத்தில் எழுதுக.**

41. கூவிற்று .............. 42. பறக்கும் ..............

43. பொலன்னறுவையில் காணப்படுவது.

i. சிவன் கோயில்
ii. லங்காதிலக்க விகாரை
iii. வெள்ளரசு மரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

44. தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் அமைந்துள்ள இடம்.
i. வாழைச்சேனை ii. கொழும்பு iii. காலி

45. கொழும்பு கோட்டே இதனைக் கட்டியவர் யார்?
i. ஆங்கிலேயர் ii. ஒல்லாந்தர்
iii. போர்த்துக்கேயர்

46. பின்வருவனவற்றுள் மின் ஊடகம் எது?
i. பத்திரிகை ii. தொலைக்காட்சி
iii. சுவரொட்டி

47. செவிப்புல ஊடகம் என்பது எதைக் குறிக்கிறது?
i. ஒலிபெருக்கி ii. பத்திரிகை iii. இணையம்

48. மூன்றாம் வகை நெம்புகோலைக் குறிப்பது.
i. தணல் இடுக்கி ii. குறடு iii. பாக்கு வெட்டி

49. சில்லும் அச்சாணியும் பயன்படுத்தி வேலைகளை இலகுவாக்கும் சந்தர்ப்பம்.
i. கதவுகளின் பூட்டை திறப்பு மூலம் திறத்தல்.
ii. வளைவுள்ள ஏறு படிகள் ஏறுதல்.
iii. மரம் ஒன்றைப் புரட்டுதல்.

50. எமது கருத்துக்களை வெளியிட பொருத்தமான நடத்தைக் கோலம் எது?
i. அன்பான நடத்தை
ii. மூர்க்கத்தனமான நடத்தை
iii. உறுதிப்பாடான நடத்தை

51. உங்கள் நண்பன் தனது சோகக் கதையைக் கூறும்போது நீங்கள் காட்டும் முகப்பாவனை
i. பயம் ii. கோபம் iii. கவலை

பின்வரும் சிங்கள வாக்கியங்களுக்கான கருத்தை எழுதுக.

52. ஓயா கௌத .......... 53. இர பாயனவா ........

பின்வரும் ஆங்கில வசனங்களுக்கான கருத்தை எழுதுக.

54. COME WITH ME .......... 55. YOU ARE A BOY ...........

56. பின்வரும் பந்தியை ஒழுங்கமைக்குக. நடுவில் வரும் வாக்கியத்திற்கு 3 என இலக்கமிடுக.
i. அந்த ஊர் மக்களின் உயிர்கள் பல காவு கொள்ளப்பட்டன.
ii. மக்கள் எல்லோரும் ஒன்று கூடி சிரமதானப் பணிகளிலும் மக்களை விழிப்பூட்டும் திட்டங்களிலும் மும்முரமாக ஈடுபட்டனர்.
iii. டெங்கு ஆட்கொல்லி ஊருக்குள் வேகமாக பரவத் தொடங்கியது.
iv. சில தினங்களின் பின் டெங்கு ஆட்கொல்லி கட்டுப்பாட்டுக்குள் வந்தது.
v. மரணப் பயம் எல்லோரையும் பற்றிக் கொண்டது

57. பெயரும் வினையுமாக வரமுடியாத சொல்லைக் கோடிடுக.
i. முயல் ii. பார் iii. விதைத்தான்


58. மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பது பழமொழி. இது என்ன வாக்கியம்? .............

'என்னைக் கவர்ந்த இரவு நேர வானம்' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை பேணப்பட்டிருத்தல் வேண்டும்.

## விடைகள் வினாப் பத்திரம் ii

1. 3 | 2. 353 | 3. 3 | 4. 2
5. 1250 ML
6. 17:15 மணி
7. காடுகளை அழிப்பதனால் மழை வீழ்ச்சி குறைவடைகின்றது.
8. பல வியாதிகளுக்கு மூல காரணம் சுத்தம் இன்மையே.
9. ii
10. கையுமெய்யுமாக
11. அடியற்ற மரம்போல
12. பச்சைக் கம்பளம்
13. சாக்கு போக்கு
14. உச்சி குளிர்ந்தாள்
15. 4.50
16. தபாற் கந்தோர்/ அஞ்சல் அலுவலகம்
17. 2 | 18. 3 | 19. 2 | 20. 2
21. 1 | 22. 2 | 23. ரூபா 375.25
24. கலாம் | 25. 3
26. 1 | 27. 3 | 28. ரூபா 25.00
29. ரூபா 10.00
30. முற்பகல் 11.40
31. 16 $cm^2$
32. காந்தம்
33. பரகசியம்
34. இடையன்
35. நிபுணை
36. iii | 37. ii | 38. i
39. கலைப் பிணையுடன் நின்றது/ எனது அண்ணன் பல கலைகளை கற்றவன்.
40. விவசாயி களைகளை அகற்றினான்.
41. கூவுகின்றன.
42. பறக்கின்றன.
43. 1 | 44. 1 | 45. 2
46. 2 | 47. 1 | 48. 1
49. 1 | 50. 1 | 51. 3
52. நீ யார்
53. சூரியன் உதிக்கிறது
54. என்னுடன் வா
55. நீ ஒரு பையன் | 56. v (3)
57. iii | 58. மேற்கோள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துணிச்சலாக முடிவெடுங்கள்

**முடிவெடுக்கத்** தயங்குபவர்கள் வாழ்வில் முன்னேறத் தயங்குகிறார்கள். சாதிக்கத் துடிப்பவர்கள் துணிச்சலாக முடிவெடுக்கிறார்கள். துணிச்சலான முடிவுகள் வரலாற்றை எப்படியெல்லாம் மாற்றியுள்ளது என்பதை பலரது வாழ்வையும் வரலாற்று நிகழ்வுகளையும் கற்றவர்கள் அறிந்திருப்பர்.

ஒவ்வொருவரும் வாழ்வில் துணிச்சலாக முடிவெடுத்த தருணங்கள் வரலாற்றையே மாற்றியமைத்திருக்கின்றன. ஸ்டீவ் ஜொப்ஸின் துணிச்சலான முடிவுகள் தொழிநுட்ப உலகிற்கு பல புதுமைகளைப் புகுத்தின.

துணிச்சலாக முடிவெடுக்க தைரியம் வேண்டும். மனதில் திட உறுதி வேண்டும். சாதிப்பேன் என்ற நம்பிக்கை அவசியம். எதையும் எதிர்கொள்ளும் அசைக்க முடியாத மனோவலிமை தேவை. இவை இருந்தால்தான் சாதிக்கலாம். தோல்விகளும் சவால்களும் உங்களை அச்சுறுத்திக் கொண்டேயிருக்கும். அவற்றைக் கண்டு சில கணங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே அவை உங்களை தோல்வியடையச் செய்து விடும். தவறான முடிவுகள் உங்கள் வாழ்வைத் தொலைத்து விடும்.

தயக்கம் உங்களை அழித்து விடும். உரிய நேரத்தில் உரிய முடிவுகளை எடுக்க நீங்கள் தயங்கினால் வெற்றியிலிருந்து விலகிச் சென்று விடுவீர்கள். எனவே, துணிச்சலான முடிவுகளின் நண்பர்களான நம்பிக்கை, தைரியம், மனோவலிமை, உள உறுதி என்பவற்றை உங்கள் உற்ற நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள்.

துணிச்சலான முடிவுகளின் எதிரிகளான தயக்கம், தளம்பல், மனச் சோர்வு, நம்பிக்கையின்மை, அச்சம் என்பவற்றை உங்கள் எதிரிகளாகவே கருதுங்கள். எதிரிகளோடு போராடுவதுபோல அவற்றுடன் போராடுங்கள். அவற்றை வெல்லுங்கள்.

நபிகளாரும் ஸஹாபிகளும் பத்ருக்கு சென்றபோது அவர்கள் அப்படியானதொரு யுத்தத்தை எதிர்பார்த்திருக்கவில்லை. மக்கா வியாபாரக் குழுக்களை தாக்கவே விரைந்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பாராதவிதமாக அது யுத்தமாகியது. மக்கா படைகள் யுத்தத்திற்குத் தயாராகி புறப்பட்டு வந்தன. அப்போது முடிவெடுக்க வேண்டும். யுத்தம் புரிவதா அல்லது திரும்பிச் செல்வதா? துணிச்சலாக முடிவெடுத்தார்கள் யுத்தம் புரிவதென்று. அல்லாஹ்வின் உதவியால் வெற்றி பெற்றனர்.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியானதும் கறுப்பின அடிமைத்தனத்தை ஒழிக்கப் பெரும் பாடுபட்டார். ஒரு கட்டத்தில் கறுப்பினத்தவர்களுக்கு விடுதலை அளித்தால் அமெரிக்கா இரண்டாகப் பிளவுபடும் நிலை ஏற்பட்டது. அமெரிக்காவை இரண்டாகப் பிரிப்பதா, கறுப்பர்களுக்கு விடுதலை அளிப்பதா? தீர்மானிக்க வேண்டிய நிலை. அமெரிக்கா பிளவுபடவும் கூடாது; நீக்ரோக்கள் விடுதலையாகவும் வேண்டும் என்று துணிச்சலாக முடிவெடுத்தார். இரண்டையும் சாதித்தார்.

துணிச்சலாக நீங்கள் முடிவெடுக்கத் தயங்கும் ஒவ்வொரு நிமிடமும் தோல்வியில் துவண்டு போக வழி தேடுகிறீர்கள் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். திட்டமிடத் தவறும்போது தவறுவிடத் திட்டமிடுகிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதேபோல்தான் துணிச்சலாக முடிவெடுக்கத் தயங்குகின்றபோது கோழைத்தனமான முடிவுகளை எடுத்துத் தோல்வியைத் தழுவுகிறீர்கள். எந்தவொரு முடிவிலும் லாபம் இருப்பதுபோல இழப்புக்களும் இருக்கத்தான் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள்



எம்.என்.எப். அஸ்ரா, தரம்: 09
அலிகார் மகா வித்தியாலயம்,
கள் எலிய



மஹ்ரீஸா ஸுஹூபி, தரம்: 09
அல்/ அந் நஜாஹ் அஹதிய்யா
பாடசாலை, கோவில்பந்தவெ




ஏ.ஆர். அப்துல் ஹாதி, தரம்: 6
அந்நஜாஹ் அஹதிய்யா
பாடசாலை, அனுராதபுரம்




எஸ்.எஸ். றிப்கா பானு,
தரம்: 9
பொ/ அல்ஹிலால் ம.க, தம்பாளை




எம்.எம். நஹ்லா, தரம்: 05
கமு/ அல்மனார் தே.பா.
ஹந்தெஸ்ஸ, தஸ்கர



எம்.ஏ. ஹிஜானா விதாத்,
தரம்: 03
தில்லையடி மு.ம.வி, புத்தளம்





எம்.எஸ்.எம். ஷாகிர், தரம்: 03,
க/கழுகமுவ மத்திய கல்லூரி,
கழுகமுவ, கெலிஓயா



ஹாஜிரா,
தரம்: 03
குகுத்தலை மு.ம.வி.



ஏ.ஆர்.எப். ஹஸ்னா, தரம்: 04
அநு/ அந்நஜாஹ் அஹதிய்யா
பாடசாலை, அநுராதபுரம்




எம்.என். பாத்திமா நஸ்ரின்,
தரம்: 06

**உங்கள் கை வண்ணங்களை**
**எமது இணையதளத்திற்கும் அனுப்பலாம்.**

**அகரம், 77, தெமடகொட வீதி, கொழும்பு 09**

**மின்னஞ்சல்:** editor@aharam.lk

**இணையம்:** www.aharam.lk

**அடுத்த சித்திரத்திற்கான தலைப்பு:**

## பெருநாள் வாழ்த்து அட்டை

**முடிவுத் திகதி: 20.08.2012**

facebook Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணாக்கரே...!

உங்கள் அறிவுக்கு விருந்தளிக்கும்
சிறுவர் கலைக்களஞ்சியம்
வெளிவந்துவிட்டது.

# ஆஃபாக்

## சிறுவர் கலைக்களஞ்சியம்

அரபு, ஆங்கிலம், உருது, ஜேர்மன், நோர்வே ஆகிய மொழிகளில் சர்வதேசத்தில் பிரபலம் பெற்ற ஆஃபாக் சிறுவர் கலைக்களஞ்சியம் இப்போது தமிழில்...

*சர்வதேச தரத்தில் உலகம் தழுவிய தகவல்களை உங்கள் கைகளிலும் சிந்தனையிலும் தவழச் செய்ய இன்றே வாசியுங்கள்...*

**AFAQ**
சிறுவர் கலைக்களஞ்சியம்

- ஒவ்வோர் இதழிலும் ஒவ்வொரு தனித் தலைப்பு
- முழுமையான தகவல்கள்...
- தரமான தாளில்... 8 பக்கங்களில்...
- தரமான அச்சுப் பதிப்பு...
- எளிய தமிழ்...
- பல்வர்ண சித்திரங்கள்...




விலை ரூபா
**50.00**
மட்டுமே

கிடைக்குமிடங்கள்:

**ISLAMIC BOOK HOUSE**
77, Dematagoda Road,
Colombo - 09

**JMF**
77, Dematagoda Road,
Colombo 09, Tel: 011 2698771, 0777412561

மேலதிக தொடர்புகளுக்கு: **T. Musthaq - 0777 396 306**

INSIGHT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org